# திராவிடநாடு

2—4—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## எண்ணிக்கை வளரட்டும்

[ தமிழ்க்கனல் ]

“பெரும்பாலோர் விரும்பும்பேர் தமிழ்நா டென்ற
    பெயர்என்றால் அப்படியே செய்வீர்” என்று
இரும்பான செவியுடைய தமிழ்அ மைச்சர்க்(கு)
    எசமானர் ஆனவடக்(கு) அமைச்சர் சொன்னார்
பெரும்பாடம் இதில்உண்டு, தம்பி! கேட்பாய்:
    பெரும்பாலோர் விருப்பம்என ஒன்(று) இருந்தால்
பெருங்காலம் கடத்தாது நிறைவேற் றல்தான்
    பேசுகின்ற குடியரசுக் கொள்கை யாகும்.

பெரும்பாலோர் விரும்பியதால் தமிழ்நா டென்று
    பெயரளவில் பெற்றிட்டோம் அதனைப் போன்றே
“பெரும்பாலோர் விரும்புகிறார் திராவி டத்தைப்
    பெறுவதற்கு” என்றநிலை வந்தால், தம்பி,
திரும்பாத வடவர்களும் திரும்பு வார்கள்!
    தீயதெனச் சொல்வோரும் “ஆம் ஆம்” என்பர்!!
விரும்பாது, “வீண்வேலை” என்போர் கூட
    விடுதலையே தக்கதென ‘ஆசி’ சொல்வர்!!

ஆகையினால் திராவிடத்தைக் கேட்போர் கூட்டம்
    அதிகரிக்க வேண்டும்!நம் கொள்கை தன்னை
போகையிலும் வருகையிலும் காண்போர்க் கெல்லாம்
    பாங்காக உரைத்(து)அவரை ஈர்க்க வேண்டும்!
தோகையரும் காளையரும் பெரியோர் தாமும்
    தொகைதொகையாய்க் கழகத்தில் சேர்த்தல் வேண்டும்!
‘வாகை’பெற வேண்டுமெனில், நம்எண் ணிக்கை
    வளர்ந்திடவே வேண்டும்!நம் நாடு வெல்க!!

# பரிசுப் பத்திரம்

—[கனகு]—

"கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டு மெல்ல, வெளியே தலையை நீட்டினுள் அன்னம்மாள்.

தாசில்தார் நல்லமுத்து பதில் பேசவில்லை. கவனம் முழுவதையும் கடிதத்தில் செலுத்தி, அதில் ஆழ்ந்து கிடந்தார் அவர்.

அன்னம்மாளுக்கு உள்ளே நிலை கொள்ளவில்லை. நல்லமுத்துவின் அருகிலேயே வந்து நின்று கொண்டாள்.

"கடிதம் மதுரையிலிருந்துதானே வந்திருக்கிறது? — என்ன எழுதியிருக்கிருர்கள்?"

"நீ கொஞ்சம் சும்மா இருக்க மாட்டே! கடிதத்தைப் படித்து முடிக்கிறதுக்குள்ளே இப்படிப் பறக்கிறியே!"

'என்றும் இப்படிக் கடிந்துபேச மாட்டாரே. இவர்! இன்றைக்கு ஏன் இப்படி?—ஒருவேளை கடிதத்தில்... எதிர்பார்த்ததற்கு மாரு......?'

அன்னம்மாளின் மனம் அடித்துக்கொண்டது. கணவன் கையிலிருக்கும் கடிதத்தை வெடுக் என்று பறித்தாவது செய்தியைப் படித்துத் தெரிந்துகொள்ளலாமா என்று அவள் எண்ணினுள். அவ்வளவு பரபரப்பு அவளுக்கு.

"உன் மகன் நம்மை எங்கே நிம்மதியாக இருக்கவிடப்போகிருன்! அவனுடைய நடவடிக்கையால் இரண்டு கலியாணங்களுமே நின்று போய்விட்டன. பார், அவர்கள் எழுதி இருக்கிருர்கள்"

நல்லமுத்துவுக்கு அழுகை மட்டுந்தான் வரவில்லை. மற்ற எல்லா அவலக் குறிகளும் அவர் முகத்தில் தென்பட்டன.

"அந்தப் பயல் எக்கேடோ கெட்டுப்போகிருன். அவனைப்பற்றி எனக்குக் கவலையே கிடையாது. அந்தப் பயலின் செயலால் என் பெண்ணின் கலியாணமுமல்லவா நின்று போய்விட்டது."

திரும்பவும் அங்கலாய்த்தார் நல்லமுத்து.

அன்னம்மா கடிதத்தை வாங்கிப் படித்தாள். அவள் கண்கள் பொலபொலவென்று நீரைச் சொரிந்தன. தன் மகன்மீது சொல்லமுடியாத ஆத்திரமும், வேதனையும் இப்போது அவள் உள்ளத்தில் குமைந்து, குமுறத்தொடங்கின.

கடிதத்தில் கண்டிருந்த செய்தி இதுதான்: "உங்கள் மகன் இங்கே — மதுரையில் நடத்துகின்ற தொழில் மிகவும்மோசமான, கேவலமான தொழில். பல குடும்பங்களை ஏமாற்றி, வருவாய் இல்லாத ஏழையர் பலரிடம் சாகசமாகப்பேசி லாட்டரியில் பணம் கட்டும்படி செய்து, வரவின் சிறுபகுதியை ஏதோ நாலைந்து பேர்களுக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டு, மற்றதை எல்லாம் சுருட்டிக்கொள்வதைவிட மோசம் மிகுந்த செயல் வேறென்றும் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட கீழ்த்தரமான தொழிலை நடத்திப் பணம்திரட்டும் ஒருவனுக்கு எங்கள் பெண்ணைக் கொடுப்பதாகச் சம்மதித்தமைக்கு மிகவும் வருந்துகிருேம். இப்போது அந்த முடிவை மாற்றிக்கொண்டுவிட்டோம்.

அத்துடன் இப்படிப்பட்ட இழிதொழில் புரியும் ஒரு குடும்பத்துடன் சம்பந்தம் செய்துகொள்ள நாங்கள் விரும்பவில்லை.

எனவே உங்கள் பெண்ணும் எங்கள் பிள்ளைக்கு வேண்டாம்."

எவ்வளவு கண்டிப்பாக, முகத்திலறைந்து எழுதி இருக்கிருர்கள். இதைவிட வேறு அவமானம் வேண்டுமா!

இவ்வளவுக்கும் காரணம் அந்தப் பயல்தானே!

தாசில்தார் வெளியே கிளம்பிவிட்டார். இன்னும் அவர் சாப்பிட இல்லை. அந்த நினைவே இப்போது வில்லை அவரிடம். அவரை அழைத்து அதை நினைவுபடுத்தவும் அன்னம்மாளிடம் தென்பு இல்லை.

போகும் வழியில் நல்லமுத்துவின் உற்ற நண்பர் வக்கீல் அறிவுடைநம்பியின்வீடு. அவரிடம் சற்று நேரம் பேச நினைத்தார் நல்லமுத்து. உள்ளே சென்ருர்.

தம் மனச்சுமையை இறக்கி வைப்பவர்போல், அன்று வந்த கடிதத்தைப்பற்றி நண்பரிடம் சொல்லிக்கொண்டிருந்தார் நல்லமுத்து.

அவ்வேளை, வெளியில் இருவர் வக்கீலைக்காண வந்திருப்பதாக வேலையாள் வந்துசொன்னுன்.

வந்திருப்பவர்கள் யார் என்று கேட்டுவிட்டு,

"அந்த வழக்கை என்னல் நடத்த முடியாது. போய்ச் சொல்லிவிடு அவர்களிடம்'! என்று உள்ளே இருந்தபடியே வேலையாளிடம் சொல்லியனுப்பினுர் அறிவுடைநம்பி.

( 4-ம் பக்கம் பார்க்க )

---

## நன்றி

10--3--61 அன்று சென்னை பிரபாத் டாக்கீஸில் எனது தம்பி வான வரம்பனுக்கும் செல்வி பானுமதிக்கும் நடைபெற்ற திருமணத்திற்குத் தலைமைதாங்கிச் சிறப்புற நடத்தித் தந்த அண்ணு அவர்களுக்கும், பரிசுகள் வழங்கிய பலருக்கும், வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும், பல மாவட்டங்களிலிருந்து வந்திருந்த கழகத் தோழர்களுக்கும், பல மாநிலங்களிலிருந்து வாழ்த்துகள் பரிசுகள் அனுப்பிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும், சென்னைக் கழகத் தோழர்களுக்கும் எனது நன்றியை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

சி. ஆர். பாலசுந்தரம்.

நகராட்சி மன்ற உறுப்பினர்.

# அமைச்சர்களின் உலா!

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (2—4—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 3

தமிழ்நாடு அமைச்சர்களின் "சுற்றுலா" பற்றிய புள்ளி விபரங்கள் இப்பொழுது வெளியாகியுள்ளன.

ஒவ்வொரு அமைச்சரும் இத்தனை நாட்கள் சுற்றுலாச் செய்திருக்கின்றனர். இவ்வளவு இவ்வளவு ரூபாய் சுற்றுலாப் படியாகப் பெற்றுள்ளனர் என்பன போன்ற விபரங்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

பதினெட்டு மாதங்கள் சுற்றுலாச் செய்த வகையில், தமிழ்நாடு அமைச்சர்கள் எண்மரும் ஒரு இலட்சத்து முப்பதினுயிரத்து அறுநூற்றிருபத்தெட்டு **(1,30,628—00)** ரூபாய்களை, அவர்களின் வழிச் செலவுக்காகப் பெற்றுள்ளனர்.

இப்படி, அவர்கள் பெற்றுள்ள தொகை அதிகமென்ருே, அல்லது குறைவென்ருே குறிப்பிட நாம் இப்போது முற்படவில்லை.

ஒருவர் பிரயாணம் செய்யப் புறப்பட்டால் செலவும் ஏற்படத்தான் செய்யும். ஏற்படுகின்ற செலவை, அவர்கள் விரும்பினுல் குறைக்கலாம் அல்லது தாராளத் தன்மையைக் காட்டலாம். அது, அவரவர்களின் இடம், ஏவல், இயல்பு, தரம், தன்மை ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

ஆனுல், நாம் இங்கு குறிப்பிட்டுக் கேட்க விரும்புவதெல்லாம், அமைச்சர்களின் இந்தச் சுற்றுலாவினுல் நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன என்பதேயாகும்.

ஒவ்வொரு அமைச்சரும் குறைந்தது சராசரி 40-50 தடவைக்குக் குறையாமல் தமிழ்நாட்டை வலம் வந்திருக்கிருர்கள்.

ஒவ்வொரு அமைச்சரும் குறைந்தது சராசரி 250-நாட்களுக்குக் குறையாமல் பிரயாணம் செய்திருக்கிருர்கள்.

அதாவது, பதினெட்டு மாதங்களில் ஏறக்குறைய ஒன்பது மாதங்களைச் சுற்றுப் பயணத்தில் செலவிட்டிருக்கிருர்கள்.

இந்தச் சுற்றுலாப் புள்ளி விவரப்படி, நமது அமைச்சர்கள், தங்களுடைய உத்தியோக முறையில் நடாத்திய சுற்றுலா எத்தனை தடவை?

தங்களுடைய கட்சிச் சார்பில் நடாத்திய சுற்றுலா எத்தனை தடவை?

தங்களுடைய சொந்தத்தில் நடாத்திய சுற்றுலா எத்தனை தடவை?

இவற்றிற்காகத் தனித் தனி எவ்வளவு பணம் செலவாகியிருக்கிறது என்பதற்குப் புள்ளி விபரம் தரப்படவில்லை.

ஒரு வேளை, மொத்தச் சுற்றுலாவுமே அரசாங்க வேலையாகத்தான் நடைபெற்றனவென்று கூறப்படுமானுல், அப்படிக் கூறப்படுவது மனதார உண்மையானுல், அதை நாம் முழுமனதுடன் வரவேற்கிருேம்.

பாருங்கள், நமது அமைச்சர்கள், "நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை" என்ற முதுமொழிப்படி, நலிவுற்றுக் கிடக்கும் மக்களின் நலம் பேணும் நல்லெண்ணத்தோடு, நாளெல்லாம் சுற்றி, நாட்டு மக்களின் குறைகளையெல்லாம் அறிந்து, அவற்றிற்கான பரிகாரங்களைத் தேடிக்கொள்வதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிருர்கள்; இவர்களல்லவா அமைச்சர்கள்; இப்படிப் பட்டவர்களுக்காகவன்ருே, வள்ளுவர்கூட ஒரு தனி அதிகாரத்தை வகுத்துத் தந்துள்ளார் என்று பெருமிதம் கொள்வோம்—பூரிப்படைவோம்.

ஆனுல், அமைச்சர்கள் அனைவருடையவும் இவ்வளவு சுற்றுலாவுக்குப் பின்னும், நாடு முன்னேறியிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்ற பதிலைத்தான் ஏமாற்றத்துடன் ஏக்கம் கலந்த குரலில் தரவேண்டியிருக்கிறது.

மக்களின் பசிக்கொடுமை தீர்ந்திருக்கிறதா? வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட்டுவிட்டதா? வரிப்பளுகுறைந்திருக்கிறதா? வளம்பெருகியிருக்கிறதா? என்ருல், ஒன்றுமே இல்லை என்ற முடிவுக்குத்தானே வரவேண்டியிருக்கிறது.

அமைச்சர்கள் இயந்திரம்போல் சுழன்று சுழன்று சுற்றுலாச் செய்தபின்னரும், நாடு, முன்பு இருந்ததைவிட இன்னும் மோசமாகிக்கொண்டு வருகிறதென்ருல், இவ்வளவு நாட்களையும், இத்தனை ரூபாய்களையும் இந்தத் தேவையும் பயனுமற்றதென்று சொல்லக்கூடிய அளவுக்கு அமைந்துவிட்ட இந்தச் சுற்றுலாவுக்குச் செலவிட்டிருக்கவேண்டியதில்லை என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது.

ஆனுல், "ஏழைசொல் அம்பலம் ஏருது" என்பது போல், நமது அமைச்சர்கள் எங்கே நமது குரலுக்குச் செவிசாய்க்கப்போகிருர்கள்!

கற்பூரக் கள்ளக்கடத்தல் அதிகமாகிறதே, அதற்கென்ன காரணம் என்று கேட்டால், நமது நாட்டில், பக்திமான்கள் அதிகம் இருப்பதால், கற்பூரம் அதிகமாகத் தேவைப்படுகிறதென்று தெளிவுரை பகரும் அளவுக்கு நமது அமைச்சர்கள் நாட்டின் நிலைமையை உணர்ந்திருக்கும்போது, பசிக்கொடுமை வரிச்சுமை பற்றியெல்லாம் எண்ணவும், அவை களையப்படவும் ஆவன செய்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ●

2-ம் பக்கத் தொடர்ச்சி

"ஏன் வருகின்ற வழக்கை வேண்டாம் என்கிறீர்கள்? யாராயிருந்தால் தான் நமக்கென்ன! வழக்கென்றால் நடத்தவேண்டியதுதானே!"

"யாராயிருந்தாலும் பரவாயில்லை. ஆனால், எதுவாயிருந்தாலும் நடத்த முடியாது பாருங்கள்"

"ஓ, பொய் வழக்கா?"

"பொய் வழக்கொன்றும் இல்லை. என் மனச் சான்றுக்கு ஒவ்வாத வழக்கு."

தாசில்தார் வக்கீலை உற்று நோக்கினார்.

"அது ஒரு சூதாட்ட வழக்கு. நாலைந்து ஆண்டுகளாகவே அந்த மனிதர் சூதாட்ட விடுதி நடத்தி வருகிறார். நல்ல வருமானம். பெரும் பொருள் திரட்டிவிட்டார்.

"திடீரென்று சென்ற வாரம் அங்கே பெரிய கலவரம் ஒன்று நடந்துவிட்டது. யாரோ ஒருவன்—வெளியூர்க்காரனாம். நாலைந்து நாட்கள் தொடர்ந்து அவனுக்கே வெற்றிகள் கிடைத்துவிட்டன. ஏறத்தாழ ஐம்பது ஆயிரத்திற்கு மேல் அவன் தட்டிக்கொண்டு போய்விட்டான். பணத்தோடு அவன் கிளம்பப் போன போது மற்றவர்கள் அவனைத் தடுத்திருக்கிறார்கள். பிறகு கேட்க வேண்டுமா? கலவரம், அடிதடி. போலீசார் வந்துவிட்டனர்.

"அடிபட்ட வெளியூர்க்காரன் மருத்துவ மனையில் இருக்கிறான். மற்றவர்கள் காவலில் இருக்கிறார்கள்."

"ஓகோ விடுதிக்காரர் தம்மைத் தப்புவித்துக் கொள்ள முயற்சிக்கிறார்."

"ஆமாம், அதோடு அடிபட்ட வெளியூர்க்காரன் சார்பில் வேறு வழக்காட நினைக்கிறார்!"

"ஏன் இந்த வழக்கை......?" தாசில்தார் அரைகுறையாக வினவினார்.

"இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் சமுகத் துரோகமானவை. இப்படிப்பட்ட செயல்களுக்கு மனமறிந்து ஊக்கமளிக்கக் கூடாது என்பது என் நோக்கம்"

"எல்லாம் பொருள்மீது கொண்டுள்ள பேராசைதான் காரணம்!"

"ஆமாம், அந்த ஆசையைத் தவறான வழியில் தூண்டிவிட்டுப் பொருள் பறிக்க நினைப்பது மிக மிகக் கேவலமானது; அறிவறிந்தோர் மனதாலும் எண்ணவொண்ணாதது அல்லவா!"

தாசில்தார் அலுவலகத்துக்குச் சென்றார்.

"சார் செய்தி தெரியுமா உங்களுக்கு?"

"என்ன?"

"மளிகைக் கடை மணிமு......"

"ஆமாம், அவருக்கென்ன? ஆயிரம் ரூபாய்க்குப் பரிசுப் பத்திரங்கள் வாங்கி இருக்கிறாரே! இன்னும் வாங்க வந்திருக்கிறாரா என்ன?"

"இல்லை சார், பாவம்! அவர் கடைக்கு முதல் வைத்திருப்பதே 2500/- தான். நாம் எல்லாம் சொன்னோம் என்பதற்காக, ஆசை காட்டினோம் என்பதற்காக—பரிசுப் பத்திரத்தின்மூலம் பத்து, இருபது தட்டிவிடலாம் என்ற எண்ணத்தோடு ஆயிரம் ரூபாய்க்கு நம்மிடம் வந்து பரிசுப்பத்திரம் வாங்கிவிட்டார். அதனால்அவருக்கு எதிர்பாராதவிதமாகப் பணத்தொல்லை மிகுந்துவிட்டது. இந்தச் சமயம் பார்த்துக் கடன் கொடுத்தவர்கள் வேறு வந்துவிட்டார்கள். இன்று அவர் கடை ஜப்தி சார்."

"அடபாவி!"

நல்லமுத்து அப்படியே உட்கார்ந்துவிட்டார். 'நான்தானே பரிசுப்பத்திரம் விற்றவன். நான்தானே ஆசை வார்த்தைகள் கூறியவன். உண்மையில் நான் நடத்தியதும் சூதாட்டம்தானே! — ஐயோ, அப்படியானாலும், அதை எனக்காகவா செய்தேன்? மேலிடத்துக் கட்டளைக்காகவல்லவா செய்தேன்!

'ஆசையைத் தவறான வழியில் தூண்டிவிட்டுப் பொருள் பறிக்க நினைப்பது மிகமிகக் கேவலமானது; அறிவறிந்தார் மனத்தாலும் எண்ணவொண்ணாதது' என்று வக்கீல் நண்பர் சொன்னாரே!

'ஐயோ, பரிசுப்பத்திரமே! உன்னால் நானும் சூதாட்டு இயக்குநன் ஆகிவிட்டேன் போலிருக்கிறதே! என் மகனைவிட, வக்கீலிடம் வந்த சூதாட்டு விடுதியாளனைவிட, நான் பெரிய சூதாடியாகி விட்டேனே? சே! அப்படியிருக்குமா? அப்படி இருந்தால், அதை அரசாங்கம் நடத்துமா?' என்று பலவாறு யோசிக்கலானார் நல்லமுத்து.

★

**9-4-61 முதல்**

# டி. கே. சீனுவாசன்

அளிக்கும்

# "தீயுள் தென்றலுள்"

என்ற தொடரோவியம்

**"திராவிட நாடு" இதழில் துவங்கும்.**

காஞ்சீபுரம்

2—4—'61.

# தம்பி !

மங்கியதோர் நிலவினிலே, வெண் மணலில் அமர்ந்துகொண்டு, கொந்தளித்துக் கொண்டிருந்த கடலை ஒரு அலட்சியப் புன்னகையுடன் நோக்கினான்—கைராட்டை காவேரி. காவேரி என்ற பெயர், வழக்கமாகப் பெண்களுக்குத்தான் வைப்பார்கள், என்றாலும், தமக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு பிறந்த குழந்தைக்குச், செல்லமாக இந்தப் பெயரிட்டு வளர்த்தனர், பெற்றோர். கைராட்டை என்ற அடைமொழியைக் காவேரி, கடினமான உழைப்பிற்குப் பிறகு பெற்றான். கைராட்டை காவேரி தூய உள்ளம் கொண்ட காங்கிரஸ் தொண்டன். தூய உள்ளம் கொண்ட தொண்டன் என்று நான் கூறியதிலிருந்தும், திங்களைக்கண்டு மகிழாமல், கடலின் கொந்தளிப்பைப் பார்த்தவண்ணம் இருந்தான் என்று குறிப்பிட்டதிலிருந்தும், கைராட்டை காவேரி, தனியாகத்தான் உட்கார்ந்திருந்தான், என்பதைத் தெரிந்துகொண்டிருப்பாய்.

காங்கிரஸ் கட்சி, நாட்டு விடுதலைக்கான போர்ப்பரணி எழுப்பிக்கொண்டிருந்த நாட்களில், காவேரி, தன்னுடைய நலன், எதிர்காலம், என்பவை குறித்துத் துளியும் எண்ணிப்பார்க்க முடியுமா! தேசிய ஆர்வத்தால் ஈர்க்கப்பட்டுக், காங்கிரஸ் தொண்டாற்றக் கிளம்பி, தொல்லைகளைத் தாங்கிக்கொண்டான்; தூய உள்ளத்தோடு பணியாற்றினான்; சுற்றுவட்டாரத்தில் இருந்தோர், சுற்றத்தார், காவேரியைத் துவக்கத்திலே ஏளனம் செய்து பார்த்தனர்; பிறகோ அவனுடைய அறிவாற்றலைப் பாராட்டினர்; அளவளாவினர்; அவனை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டுமென்று மற்றவர்க்கு அறிவுரைகூடக் கூறினர்.

காவேரி, மற்றப்பணிகள் எல்லாவற்றையும்விடக், கைராட்டையை அனைவரும், புனிதப் பொருளாகக் கருதவேண்டும், நூற்பது தமது தலையாய கடமை என்று கொள்ள வேண்டும், கதர் அணிவது தர்மம் என்று உறுதிகொள்ளவேண்டும், என்று எடுத்துக் கூறித், தன் வட்டார முழுவதிலும் கைராட்டையைப் பரப்பும் பணியினை மிகத் திறம்பட, அதிக ஆர்வத்தோடு செய்துவந்ததன் காரணமாகத்தான், கைராட்டை காவேரி என்ற பெயர் கிடைத்தது. கடற்கரை மணலிலே அமர்ந்திருந்தபோது, அவன் மனம், அந்தப்

# கைராட்டை காவேரி (1)

பழைய நாட்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் மீது பாய்ந்து சென்றது; உள்ளத்தில் அடிவாரத்தில் இருந்த நினைவுகள் துள்ளித்துள்ளி வெளிப்புறம் வருவதும், மீண்டும், அடிவாரம் செல்வதுமான நிலைமை—மனக்கடலிலே, கொந்தளிப்பு. அவன் கைராட்டை காவேரியானபோது, கோட்டையிலே, அவன் விரும்பிய கொடி பறக்கவில்லை! இப்போது பறந்துகொண்டிருந்தது-பாவாணர் கூறினரல்லவா, பட்டொளி வீசிப் பறந்திடக் காணீர் என்று, அதுபோல.

அதைக் கண்டு, அவன் மனதில் மகிழ்ச்சி அல்லவா பொங்கி இருக்கவேண்டும்—எண்ணம் ஈடேறிவிட்டது — விடுதலை கிடைத்துவிட்டது — புதுவாழ்வு பிறந்துவிட்டது—பொற்காலம் ஆரம்பமாகிவிட்டது—புனிதப்போரில் வெற்றிகண்டாகிவிட்டது—என்றெல்லாமல்லவா, எண்ணிக் களிப்படைந்திருக்கவேண்டும், என்று கேட்கிருய். அப்படித்தான் கேட்கத் தோன்றும். பலர் காவேரியை அப்படித்தான் கேட்கிருர்கள். ஆனல் கைராட்டை காவேரியின் மனதில் கோபம், ஏமாற்றம், திகைப்பு, துக்கம், வெட்கம், என்பவைகள்தான், கொந்தளித்துக்கொண்டிருந்தன — கடலில் முத்து இருக்கத்தான் செய்கிறது, ஆனல் எல்லா இடத்திலுமா!—இல்லையல்லவா—சுருவும், அதற்கு இரையாகும் வேறு மீனினமும், பாம்பும், வேறுபல நச்சுப் பூச்சிகளும், நிரம்ப இருக்கின்றன. காவேரி, இதைக்கூட எண்ணிப்பார்த்தான்—முத்து எடுக்க மூச்சடக்கிக், கத்தும் கடலடி சென்றவன், கரத்தில் சிக்கியது சிப்பி என்றெண்ணி எடுத்துவந்து உடைத்துப் பார்க்கும் போது, முத்து இருக்கவேண்டிய இடத்திலிருந்து, சிறியதோர் நாகம் சீறிக் கிளம்பிடக் கண்டால், எப்படி இருக்கும் நிலைமை என்று எண்ணினன்—ஓவென்று உரக்கச் சிரிக்கலாம் போலத் தோன்றிற்று; அடக்கிக்கொண்டான்; அங்கு வேறு பலர், வெவ்வேறு நிலையில், சிரிப்பொலி கிளப்பிய படி இருந்தனர்; அவர்கள் அறிவார்களா, இவன் மனக் கொந்தளிப்பை!

"ஐயா! சூடா பட்டாணி, கடலை, வேர்க்கடலை!"—என்று சேதி கூறும் முறையிலே, குரலெழுப்பியபடி, கூடைக்காரன் வந்தான்; காவேரி, வேண்டுமென்றும் சொல்லவில்லை, வேண்டாமென்றும் கூறவில்லை; அவனுல், வேறுமுக்கியமான விஷயங்களிலேயே, வேண்டும்! அல்லது வேண்டாம்! — என்று கூறமுடியவில்லையே, பாபம். கூடைக்காரன், காவேரி எதிரே, உட்கார்ந்தான், குத்துக்காலிட்டபடி. அந்த மணற்பரப்பில், நடந்து நடந்து அலுத்துப்போனவன்—ஆகவே இளைப்பாறிக் கொள்ளலாம் என்ற நினைப்பு. உட்கார்ந்தவன், காவேரியின் முகத்தைப் பார்த்ததும், அடையாளம் கண்டுபிடித்துவிட்டான், "நீங்களா! கைராட்டை காவேரி அண்ணன்தானே! அண்ணேன், எப்படி இருக்கறிங்க...... உங்களுக்கு என்ன அண்ணேன், குறை! உங்க இராஜ்யம்தானே இப்ப நடக்குது... இப்பத்தான், உங்க மனம் குளிர்ந்திருக்கும்; கொடி பறக்குதே கோட்டையிலே!"—என்று, கேலியாக அல்ல, கள்ளங்கபடமற்ற முறையிலே, பேசினன் கூடைக்காரன். கைராட்டை காவேரி, தலையைக் கவிழ்த்துக்கொண்டான். காரணம் புரியவில்லை, கூடைக்காரனுக்கு.

"அண்ணேன்! முன்னே மாதிரிதானே, கைராட்டினமும் கையுமா இருக்கறிங்க. முன்னேயெல்லாம் உங்கபேச்சைக் கேட்காதவங்களெல்லாங்கூட இப்ப, கைராட்டினம் சுத்துவாங்களே......உங்க இராஜாங்கம் தானே நடக்குது" என்று கூடைக்காரன் பேசிக் கொண்டே போனுன். அந்தப் பேச்சு, காவேரிக்கு மெத்த வேதனையாக இருந்தது. ஏனென்ருல், அன்று காலைப் பத்திரிகையிலேதான், மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர், தான் இப்போது, கைராட்டை சுற்றுவதில்லை என்று தெரிவித்தது போடப்பட்டிருந்தது. அதைப் படிக்கும்போதே, கைராட்டைகாவேரிக்குக் கோபம்கோபமாக வந்தது; பாவிமனுஷன் இப்படி மானத்தைவாங்குகிருனே! சுற்ருவிட்டால்கூடப்போகிறது, இதை நாலுபேருக்குத் தெரிகிறபடி பேசித் தொலைக்கத்தான் வேண்டுமா?" என்று எண்ணிக் கொதித்தான். ஆனல், மறுகணம், கோபம் மாறிவிட்டது. "இந்த ஆசாமி, பெரியமனிதன். குற்றத்தை ஒப்புக்கொண்டுபேசுகிருன். மற்றவர்கள், இதைக்கூடச் செய்வதில்லையே! இன்னமும் ஊரை ஏமாற்றிக்கொண்டல்லவா இருக்கிருர்கள். அவர்களை விட இந்த ஆசாமி எவ்வளவோ மேல், என்று எண்ணிக் கொண்டான். கூடைக்காரனிடம் வேறுவிதமாகப் பேச்சைத் திருப்பிவிட்டாலொழியத் தன்னுடைய வேதனையை அதிகமாக்கும்விதமாகத்தான் அவன் எதையாவது பேசிக்கொண்டிருப்பான் என்ற எண்ணத்தில், காவேரி, கூடைக்காரனைப் பார்த்து, "ஆமாமப்பா! நீ, ஏன் கிராமத்தைவிட்டு, இங்குவந்து சேர்ந்தே, கெட்டவன் பட்டணம் போவான் என்பார்களே. ஊரோடு உற்ருர் உறவினரோடு, காடு கரம்பைக் கவனித்துக் கொண்டு, கிடைக்கும் கஞ்சித்தண்ணியைக் குடித்துக் கொண்டு, குழந்தை குட்டிகளைப் பார்த்துக்கொண்டு, நிம்மதியாக இருப்பதைவிட்டுவிட்டு, இப்படி, பட்டணத்துக்கு வந்து, கூடை சுமந்துகொண்டு, கூலிப்பிழைக்க வந்துவிட்டாயே, ஏன்?" என்று கேட்டான் காவேரி.

"என்னைக் கேக்கறியே அண்ணேன், உங்க இராஜாங்கத்தை நடத்துகிறவங்களையல்லவா கேட்கவேணும்" என்று ஒருபோடுபோட்டான், கூடைக்காரன். காவேரி, இரண்டொரு நாட்களுக்கு முன்புதான் படித்தான், சட்டசபையிலே காங்கிரஸ் அமைச்சர், "கிராமத்து மக்கள் நகரத்துக்குச் சென்றுவிடுவது, வளர்ச்சிக்கு அறிகுறி — பொருளாதார முன்னேற்றத்துக்கு அடையாளம்" என்று பேசியதை. அமைச்சர் பேசியது, சரியானதுதான் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தால், கிராமத்தைவிட்டு நகரத்துக்கு ஏன் வந்தாய், என்று கூடைக்காரனைக் காவேரி கேட்டிருக்க முடியாதல்லவா? நல்லவேளை, நம்முடைய அமைச்சர் பேசியது, இவனுக்குத் தெரிந்திருக்காது, இவன் எங்கே சட்டசபை நடவடிக்கைகளைப் படித்திருக்கப் போகிருன் என்று எண்ணிக்கொண்டான் காவேரி.

இருப்பிடம் கிராமமோ நகரமோ, இடம் அல்ல முக்கியம்; முன்பு இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும், வாழ்க்கையிலே முன்னேற்றம், தொழிலிலே முன்னேற்றம், நிம்மதி, வளர்ச்சி, ஏற்பட்டிருக்கிறதா, என்பதல்

லவா, முக்கியம். மாந்தோப்பாக இருந்தாலென்ன, புளியந்தோப்பாக இருந்தாலென்ன, காலாகாலத்திலே காய்த்து, காய்த்தது நல்லவிலைக்கு விற்றுக் காசுகிடைத்து, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தினல் போதும் என்றுதானே எவரும் எண்ணுவார்கள். கூடைக்காரன், மண்வெட்டியும் கையுமாகத்திரிந்து, மடைதிருத்திக் கிராமத்திலே இருந்தபோது, கிடைத்த வாழ்க்கை நிம்மதியைக் காட்டிலும், பட்டணத்திலே பிழைக்கவந்ததால், சிறப்பான வாழ்க்கையா, கிடைத்தது? அதுதானே இல்லை! இடம் மாறினன், இடர் மாறவில்லையே! தொழிலை மாற்றிக்கொண்டான், தொல்லை குறையக்காணேம்!

கைராட்டை காவேரிக்கு இது நன்ருகப்புரிகிறது; புரிவதால் அமைச்சர், இதைப்போய், வளர்ச்சியின் அறிகுறி என்கிருரே, எவ்வளவு......! என்று எண்ணுகிருன்; என்ன கடினமான வார்த்தை பொருத்தமாக இருக்குமென்று எண்ணிப் பார்த்துப் பார்த்து, மனதிற்குள்ளாகவே குமுறிக்கொள்கிருன்.

*

"அண்ணு! அதெல்லாம் இருக்கட்டும். இதை எல்லாம் உனக்கு யார் சொன்னது!'' என்றுதானே, தம்பி, கேட்கத்தோன்றுகிறது. உனக்கு அந்த ஐயப்பாடு ஏற்படும்என்று எனக்குத்தெரியும். இருவருமேதான் சொன்ஞர்கள்.

*

"என்ன செய்தாலும், இந்த ஜனங்களுக்குத் திருப்தியே ஏற்படுவதில்லை. குறைகூறிக்கொண்டிருப்பதே வேலை. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா. வெள்ளைக்காரன் காலத்திலே, இங்கே, ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளைப்போக்க, இழிவுகளைத் துடைக்க, பஞ்சத்தை நீக்க, எவ்வளவோ கஷ்டப்பட்டு வேலை செய்துகொண்டிருக்கிருர்கள். உடனே தீர்ந்து விடக்கூடிய காரியமா இது. என்னய்யா, சுயராஜ்யம்! சுகம் எங்கே? என்றுதானே கேட்கவேண்டியிருக்கிறது, என்று பேசுகிருர்களே, கொஞ்சம்கூடப் பொறுப்பு இல்லாமல்''—என்று கைராட்டை காவேரி, சிறிதளவு கோபத்தோடு, பேசிக்கொண்டிருந்தான், என் நண்பன் 'நவபாரதி'யிடம். தம்பி! நவபாரதியை உனக்கு அறிமுகப்படுத்தவில்லையே. 'நவபாரதி' என்பது, பெற்றேர் இட்ட பெயரல்ல; அவர்கள் பாபம், அதெல்லாம் தெரியாதவர்கள், இராமா கிருஷ்ணு கோவிந்தா, என்று காலந்தள்ளி வந்தவர்கள்; எனவே அவர்கள் நரசிம்மன் என்றுதான் பெயரிட்டார்கள்; ஆனல், நரசிம்மன், காவேரி போலவே, காங்கிரஸ் தொண்டாற்றக் கிளம்பி, 'நவபாரதி' என்று பெயரெடுத்துக்கொண்டான். காகிதம் கிடைத்தாலும், நல்ல சுவர் கிடைத்தாலும், காங்கிரசைப்பற்றி எதையாவது எழுதுவான், அடியில், இப்படிக்கு 'நவபாரதி' என்று கையெழுத்து இருக்கும்.

பிகார் பூகம்பம் ஏற்படக் காரணம் என்ன?

பிரிட்டிஷ் ஆட்சியால் பூமாதேவி குலுங்கிக் குலுங்கி அழுதாள்! அதுதான் காரணம்!!

இப்படிக்கு
நவபாரதி.

தம்பி! இப்படி எதையாவது எழுதியபடி இருப்பான். போலீசார் வெள்ளை அடித்து மறைப்பார்கள்; இவன் வேறு இடத்தில் எழுதுவான்; பிறகு இதிலே படிப்படியாக முன்னேறிக் கைஎழுத்துப் பத்திரிகை நடத்தி, பிறகு அச்சிட்டு வழங்கி, பிறகு அச்சகமே வைத்து, பிறகு அது பறிமுதலாகி, பிறகு அதற்காகப் பொதுமக்கள் நிதி திரட்டிக் கொடுத்து, பிறகு அதை வைத்துப் பெரிய அளவில் பத்திரிகை நடத்தி, இப்போது, சர்க்காரின் சாதனைகளைத் தெரிவிக்கும், வெளியீடுகளை, அச்சிட்டுப் புகழ் (பொருள்) ஈட்டி வாழ்ந்து வருகிருர், நவபாரதி. அவரிடம் பேசும்போது, காவேரிக்கு, ஆர்வமும், துணிவும் இயற்கையாகவே அதிகமாகத்தானே ஏற்படும். தனக்குத் தகுந்த பக்கபலம் கிடைத்தது என்ற எண்ணத்தில், பேசலானன். மேலும், நான் இருக்கிறேனல்லவா — என்னைக் குத்திக் கிளறி வேடிக்கை பார்க்கலாம் என்ற நோக்கம் வேறு. நான், அன்று அங்கு இல்லாவிட்டால், நவபாரதி, வேறுவிதமாகக், காவேரியுடன் கூடிக்கொண்டு பேசியிருப்பானே என்னவோ, நான் இருந்துவிட்டதால், நவபாரதி காவேரியுடன், வாதாடவேண்டித்தான் ஏற்பட்டுவிட்டது; ஏனெனில் நவபாரதி, என்னிடம் பலமுறை சுயராஜ்ய ஆட்சி சரியாக நடைபெறவில்லை என்று ஒப்புக்கொண்டு பேசியவன்!!

"காவேரி! மக்கள் குறை கூறுவது இருக்கட்டும். நம்முடைய காங்கிரஸ் ஆட்சியை மற்றவர்கள், அதிலும் அண்ணுதுரை போன்றவர்கள், குறைகூறிப் பேசும்போது, காங்கிரசுக்காகப் பாடுபட்ட நமக்குக் கோபம் வரத்தான் செய்யும். ஆனல், நமக்கே, உள்ளபடி, காங்கிரஸ் ஆட்சியில், திருப்தி ஏற்பட்டிருக்கிறதா? நாம், எதிர்பார்த்தபடி, திட்டமிட்டபடி, மக்களிடம் வாக்குறுதி அளித்தபடியாகவா, ஆட்சி நடக்கிறது?'' என்று நவபாரதி கேட்டான். அவன் பேச்சு, அழுத்தந்திருத்தமாக இருந்தது. தம்பி! எனக்குத் தூக்கிவாரிப்போட்டது; ஏனெனில், நவபாரதியின் புதிய வெளியீட்டில், காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளை அவ்வளவு அதிகமாகப் பாராட்டிக் கதிரவன் ஒளி காணுதார், கானம் கேட்டு இன்புருதார், காங்கிரஸ் ஆட்சியின் சாதனையை உணராதார், மூவரும், ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள்! தாயல்ல அவள் — பேய்! பெரும்பேய்! பிரிட்டிஷார் விட்டுச்சென்ற பேய்!!—என்று நவபாரதி எழுதியிருந்தான்.

அவன்தான் காவேரியைக் கேட்கிருன், எதிர்பார்த்தபடியாகவா காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது, என்று; என் எதிரில்!

காவேரிக்குக் கடுங்கோபம்; "நவபாரதி! குறைபட்டுக்கொள்வது, யாருக்கும் எளிது. ஆசை இருக்கும். அடுத்த விநாடியே அம்பாரிபோட்ட யானைமீது, அமர்ந்து பவனிவரவேண்டும், பக்கத்திலே ஒரு இராஜகுமாரி உட்காரவேண்டும், அவள் கூந்தலில், பாரிஜாத

மலரைச்செருகி மகிழவேண்டும், என்றெல்லாம். உடனே முடிகிற காரியமா! தோட்டமே கைக்குவந்து கொஞ்சக்காலம்தானே ஆகிறது. திருத்தி, பாத்திகட்டி, பயிரிட்டு, செடிமுளைத்து...செ! இதுகூடத்தெரியாமல், அரசமரத்தைச் சுற்றிக்கொண்டே, அடிவயிற்றைத் தடவிப்பார்க்கிற கதைபோலச், சுயராஜ்யம் வந்து என்ன பலன்? ஒன்றும் காணேமே! என்று மூக்கால் அழுவதா?''—என்று படபடத்துப் பேசினன், காவேரி.

நவபாரதி, சில விநாடிகள் ஒன்றும் பதில் பேசவில்லை. ஒருவேளை, தனது அடுத்த வெளியீட்டுக்கு, காவேரியின் அந்தப் பேச்சை முன்னுரையாக்குவதா, முடிவுரையாக்குவதா என்று யோசனைசெய்து கொண்டிருந்தானே, என்னவோ!

ஒன்றுகூற மறந்துவிட்டேனே, நாங்கள் மூவரும் வேறு ஒரு காரியமாகக், கிராமம் சென்றிருந்தோம். அங்குதான் இந்த உரையாடல்.

நவபாரதி பதிலேதும் பேசாததால், காவேரிக்குத் துணிவு அதிகமாகிவிட்டது, பிரிட்டிஷார் செய்துவிட்டுப்போன நாசம் கொஞ்ச நஞ்சமா? அந்த நாசத்தால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நாட்டைத் திருத்தி, நல்ல நிலைமையை ஏற்படுத்துவது எளிதான காரியமா? விரைவிலே முடிந்துவிடக்கூடிய காரியமா? வேரோடு கீழே சாய்ந்துவிட்ட பெருமரம் நம் கைபட்ட உடனே பூத்துக் காய்த்து, கனி குலுங்கவேண்டுமென்று சொல்வது போலல்லவா இருக்கிறது இவர்கள் கூற்று!'' என்று காவேரி பேசினன்.

“நண்பருக்கு நான் ஒரு விஷயம் கவனப்படுத்தலாமா?'' என்று நான் கேட்டேன். “ஒன்று என்ன! ஓராயிரம் சொல்லலாம்! என்ன சொல்லப்போகிறீர்கள் என்பது தெரியாதா எங்களுக்கு'' என்று சற்றுக் காரமாகவே கூறினன் காவேரி.

தாராளமாகப் பேசலாம் என்று கூறினதால், நான், சற்று விரிவாகவே, விளக்கமளிக்கலானேன். “தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் வேலை, பாலைவனத்தைச் சோலைவனம் ஆக்குவதுபோன்ற மிகமிகக் கடுமையான வேலை என்று மக்கள் எண்ணி ஏமாற வேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சியினர் கருதுகிருர்கள்—பேசுகிருர்கள்.'' “புயலாலே பூந்தோட்டம் அழிந்தது; கிணற்றிலேயோ இடி விழுந்து தூர்ந்து போய்விட்டது. ஆறு, ஆருவது கல்லில் இருக்கிறது, அங்கிருந்து வாய்க்கால் வெட்டிக்கொண்டு வருவதற்கோ, இடையில் ஒரு சிறு குன்று கிடக்கிறது, நான் அந்தக் குன்றைக் குடைந்து வாய்க்கால் அமைக்கலாமா; அதைச் சுற்றி வளைத்துக்கொண்டு வாய்க்கால் கொண்டு வருவதா என்பதுபற்றி, நிபுணர்களைக் கேட்போமா அல்லது “நின்று தவமிருந்தாள்,'' கோயில் பூஜாரியிடம் யோசனை கேட்போமா என்று சிந்தித்த வண்ணம் இருக்கிறேன், சிரமப்படுகிறேன், நீயோ மல்லிகைப்பூ மாலை எங்கே, மருக்கொழுந்துக் கட்டு எங்கே, மனேரஞ்சித மலர் எங்கே? என்று கேட்டுத் தொல்லை தருகிருயே என்று பேசும் தோரணையில், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிருர்கள். இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு வெள்ளைக்காரன் நீங்கியபோது, பிணம் புதைக்கக் குழி வெட்டும் வேலையிலிருந்து இவர்கள் துவக்கவேண்டி வந்ததுபோலவும், அதற்குள் மக்கள் ஏதோ வீணுக அவசரப்பட்டு, ஆத்திரப்படுவதுபோலவும் கருதிக்கொண்டு, குறைபட்டுக் கொள்கிருர்கள்.

வெள்ளைக்காரன் இந்தியாவைச் சுரண்டினன்—மறுப்பாரில்லை; செல்வத்தைக் கொள்ளை கொண்டான்—மறைப்பாரில்லை; ஆனல், அவன் விட்டுச் சென்ற இந்தியா பாலை வனமுமல்ல—படுகுழி நிரம்பி, கள்ளி காளான் பூத்துக்கிடக்கும் கடுவெளியுமல்ல என்பதை மக்கள் அறிவார்கள்.

பெரும்போரிலே சிக்கிக், கொடுமைக்கும் குண்டு வீச்சுக்கும் இலக்காகி, எழில்மிகு நகரங்கள் மண்மேடுகளாயின; வளம்மிகு வயல்களெல்லாம் பிணக்காடுகளாயின; தொழிற்சாலைகளெல்லாம் குப்பை மேடுகளாயின; கடலே இரத்த மயமாயிற்று! குடும்பங்கள் இலட்சக் கணக்கிலே சிதறின! வாழ்வு சிதைந்தது! வீடிழந்து நாடிழந்து, எதிரியிடம் சிக்கிச் சீரழிந்துபோன மக்கள் ஆயிரமாயிரம்! நடுநிசியில் விமானம் வரும்; நாசக் குண்டுகளை வீசும்; கட்டிலும் தொட்டிலுமே புதை குழியாகும்; கன்னல் மொழிக் குழவி கண்ணெதிரே கூழாகும்; மனம் குழம்பித் தாய் மடிவாள்; தகப்பனே, மரமாகி நிற்பான், மனத்துயரால்!

கட்டிடங்கள் இடியும் சத்தமும், குண்டுகள் சீறிடும் சத்தமும், குலை நடுங்கி மக்கள் கூச்சலிடும் சத்தமும், நித்தியநாதமாக இருந்தது. தலைநகர்களைவிட்டுச் சர்க்கார் ஓட்டமெடுப்பதும், உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் குழியில் இறங்கிக் குடும்பம் நடாத்துவதும், சர்வ சாதாரணமான சம்பவமாக இருந்தது.

நாமெல்லாம் மாண்டுபோனலும், நாம் பெற்றெடுத்த செல்வங்கள், பிள்ளைக்கனி அமுதங்கள், இந்தப் பேசும் பொற்சித்திரங்கள் பிழைத்தால் போதும்; குண்டு வீச்சும், பிண நாற்றமும் பிடித்தாட்டும் இந்த நாட்டிலே, இந்த மொட்டுகள் இருந்து கருக வேண்டாம்; கண்காணுச் சீமை சென்றேனும் கண்மணிகள் வாழட்டும்; காலமும் நிலைமையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைத்தால் உச்சிமோந்து முத்தமிடுவோம்; அன்றி, இங்கேயே மடிய நேரிட்டாலும், நமது ‘குலக்கொடி' அழிந்துபடவில்லை — எங்கோ ஓரிடத்தில்,

போரும் புகையும், சச்சரவும் சாவும் தீண்டாத ஓர் திருநாட்டிலே, நமது உயிரோவியங்கள் வாழ்கின்றன—என்று மனத்திருப்தியுடன் மண்ணில் புதைபடுவோம்; மாணிக்கங்கள் தப்பினுல் போதும்; இன்பப் பெருக்குகள் இந்தத் துன்ப பூமியிலிருந்து வேறிடம் சென்ருல் போதும்—என்று எண்ணித், தலைவாரிப்பூமுடித்துக்,கன்னத்தைத் துடைத்து முத்தமிட்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'கண்ணே சென்றுவா! மணியே போய்வா! என் உயிரே, உன்னைப் பிரிகிறேன்! கர்த்தன் அருளால் மீண்டும் சேருவோம்!'—என்று தழதழத்த குரலில் கூறி, ஆயிரக்கணக்கான குழந்தைகளை, பிரிட்டனிலிருந்து, கனடாவுக்குக் கப்பலேற்றி அனுப்பி வைத்தனர்.

இவ்விதமான இடுக்கண்களும், பொருள் இழப்பும், உயிர் இழப்பும், கேட்போர் உள்ளத்தை உருக்கும் விதமான அளவிலும், வகையிலும் நடைபெற்று, நாடுபல நாசமாயின போரின் காரணமாக!

அன்று அலர்ந்த மலரைக் கண்டு திங்கள் பலவாயினவாம் ஒரு வீரனுக்கு—களத்திலே கடும்போரிலே அவன் நெடுங்காலமாக ஈடுபட்டிருந்த காரணத்தால்! ஓர் நாள் களத்திலே சிறிது ஓய்வு கிடைத்ததாம்; அது போது அவன், களத்தை விட்டுச் சிறிதுதூரம் சென்று, அழிவுக்கு மத்தியிலே, எப்படியோ தப்பிப் பிழைத்த ஒரு மலரைக் கண்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, அதைப் பறிக்கச் சென்ருனும்! வேவு பார்த்துக்கொண்டிருந்த எதிரிப்படையினன் ஒருவன், மலர் பறிக்கும் போது, அவனைச் சுட்டுக் கொல்ல, கரத்தில் மலரும், மார்பில் இரத்தமுமாக அந்த வீரன் இறந்துபட்டானும்!

கண்ணீர் கன்னத்தில் புரண்டோடச் செய்யும் காதைகள் பலப்பல, களம் தந்தது.

அத்தகைய கடும்போரிலே, சிக்கிச் சீரழிந்த நாடுகளெல்லாம், மீண்டும் வாழ்வு பெற்றுவிட்டன; அங்கெல்லாம் ஆளவந்த நாயகர்கள், எவ்வளவு அரும்பாடு பட்டிருந்தால், எத்துணைத் திறமையுடன் திட்டம் தீட்டி வெற்றி பெற்றிருந்தால், இவ்வளவு அழிவுக்குப் பிறகு அங்கு மக்களுக்கு வாழ்வு கிடைத்திருக்க இயலும் என்பதை எண்ணிப்பார்த்தால் போதும்—இங்கு ஏதோ மலையைக் குடைபிடித்து, மங்தையைக்காத்திடும் போக்கிலே பணிபுரிவதாகப் பேசும் காங்கிரஸ் ஆளவந்தாரின் திறமை வெட்டவெளிச்சமாகிவிடும்.

போர் நம்மைத் தீண்டவில்லை—நினைவில் இருக்கட்டும்! களம், இங்கு இல்லை—கவனமிருக்கட்டும்! நாசக் குண்டுகள், நமது நகர்களைப் பதம் பார்க்கவில்லை; எல்லாவற்றையும் சினிமாப் படத்திலேதான் பார்க்கிருேம்; இதழ்கள் மூலம் 'சேதி' தெரிகிறது.

அணுகுண்டு விழுந்த ஜப்பானும், பிணமலை குவிந்த ஜெர்மனியும், இரத்த ஆறு ஓடிய ரஷியாவும், இடிபாடு மயமான இங்கிலாந்தும், சீரழிந்த வேறு பல சிறு நாடுகளும், புயலுக்குப் பிறகு புள்ளினங்கள் கிளம்பிப் பண் இசைத்து, புதுக் கூடு கட்டிக்கொண்டு, பெடையுடனும் குஞ்சுகளுடனும் குதூகலமாக வாழ்வதுபோல, மீண்டும் வாழ்வின் ஒளியைப் பெற்றுவிட்டன!

போரே தீண்டாத இப்பொன்னுடு, ஓர் புனித ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது; மற்ற எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் கிட்டாத மதிப்பும் செல்வாக்கும், இங்கு காங்கிரஸ் தலைவர்களுக்குக் கிடைத்தது.

போரிலே பெரும் பணியாற்றி, அழிய இருந்த பிரிட்டனைக் காப்பாற்றி, ஹிட்லரை முறியடித்த பெருமைக்கு உரியவராக இருப்பினும், சர்ச்சிலை, வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிடும் துணிவு, பிரிட்டிஷ் ஜனநாயகத்துக்கு இருந்தது.

இங்கோ, கல்லை நிறுத்தினுலும், கட்டையைக் காட்டினுலும் காங்கிரஸ் என்ருல் தட்டாமல் தயங்காமல், 'ஓட்' அளிக்கவேண்டும் என்றனர் தலைவர்கள்; ஆஹா! என்றனர்மக்கள். ஒரு நாட்டு மக்கள் இதைவிட விளக்கமாகக், கட்சிப்பற்றையும் தலைவர்களிடம் 'பக்தி' யையும் காட்டியிருக்கமுடியாது.

இவ்வளவுக்குப் பிறகு, எதிர்ப்போர் எவரும் இன்றி, அழைத்த இடம் வருவதற்கு ஒருநாட்டு மக்கள் தயாராக இருந்த நிலையில், எதைச் சாதிக்க முடிந்தது? ஏன் வறுமையைத் துடைக்கமுடியவில்லை? ஏன் மக்களின் வாட்டத்தைப்போக்க முடியவில்லை?

தேசபக்தரே! தேசோத்தாரசுரே! தேசபந்துவே! தீனபந்துவே! ஜோதியே! சுடரே! முத்தே! மணியே! வாழவைப்போம் என்று வாக்களித்த பெம்மானே! வாழ்வளிக்கும் திட்டம் எங்கே? சீரளிக்கும் சட்டம் எங்கே? என்று மக்கள் கேட்டால் சீறுகிருர்களே, நியாயமா?'' என்று நான் கேட்டேன்.

"இது தெரியும் இவர்களுக்கு, 'வளவள'வென்று பேச, காமராஜர்கூட, இதைச் சென்ற கிழமை கண்டித்துப் பேசினுர்'' என்ருர் காவேரி.

"ஆமாம்! மக்கள் நியாயம் கேட்டால், 'வளவள' வென்று பேசுவதுபோலத்தானய்யா, தோன்றும். இது எதேச்சாதிகாரிகளின் போக்கு. 'மளமள'வென்று காமராஜரால் பேசமுடியும் — பேசவேண்டியதும் அவ்வளவுதான், அவருக்கு! காங்கிரஸ் நல்லகட்சி, மத்ததெல்லாம் மோசம். எங்களால்தான் ஆளமுடியும். மத்தது பிரயோஜனம் இல்லை. நன்மைகள் செய்கிருேம். அதற்காகத்தான் வரிபோடுகிருேம். வரி அதிகம் கொடுத்தால் நன்மை அதிகம் செய்வோம்.''

இவ்வளவுதான், அவர் சரக்கு! இதைக் காட்டி விட்டுக், கோணியைச் சுருட்டிக்கொண்டு அடுத்த ஊர் போய்க் கடைபரப்புவார். நாங்கள் அப்படி அல்லவே! ஆதியோடு அந்தமாக, விளக்கமாக, மனதில் பதிகிற படி பேசவேண்டும். அது உங்களுக்கு வளவளவென்று தான் தோன்றும்'' என்று நான்சொன்னேன். நவபாரதி குறுக்கிட்டு, “பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பிறகு, இந்தியா எந்த நிலைமையில் இருந்தது என்பதுபற்றிக் காவேரி சொல்வதுதவறு?'' என்று கேட்டார். “அதைக் கேட்ட தற்குத்தான், ஒரு கதாகாலட்சேபமே செய்துவிட் டாரே!'' என்று கேலி செய்தான் காவேரி. “திட்டவட்ட மாகப் பேசவேண்டும்'' என்றான் நவபாரதி. “புள்ளிவிவ ரப்படி'' என்று திருத்தமளித்தான் காவேரி. “புள்ளிவிவ ரம் கேட்கிறீர்களே — எந்தப் புள்ளிவிவரம்? உங்கள் சர்க்கார் தருகிறபுள்ளிவிவரம்போலவா!'' என்று, எனக் குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, “உங்கள் சர்க்கார்தருகிற புள்ளிவிவரம் மகாமட்டம் என்று, திட்டக்கமிஷன் உறுப்பினர், சீமன்நாரா யணனே, கண்டித்திருக்கிறாரே, தெரியுமா!! ஆனால், நான் அப்படிப்பட்ட புள்ளிவிவரம் தரப்போவதில்லை. எல்லோரும் ஒப்புக்கொள்கிறதை மட்டுமே சொல் கிறேன்; வெள்ளைக்காரன் இந்த நாட்டைவிட்டு வெளி யேறுகிறபோது, தங்கமாகவும் ரொக்கமாகவும் நம் முடையது என்று இருந்த தொகை 1,179,74,00,000 ரூபாய் என்றுகணக்கிட்டிருக்கிறார்கள். பதினான்காண்டு ஆட்சி நடத்தி இருக்கிறீர்கள்—இப்போது நிலைமை என்ன தெரியுமல்லவா? **4971**-கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறோம். 1959-60-ல், கடனுக்காகச் செலுத்தும் வட் டித் தொகை 129-கோடி ரூபாய். 1960-61-ல், வட்டித் தொகை 143-கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார் கள். இதைக்கூடக் காவேரி மறுக்கமுடியுமா?'' என்று கேட்டேன். நவபாரதி சிறிதளவு குறும்புத்தனமான பார்வையைக் காவேரியின் பக்கம் செலுத்தியபடி, “கடன்பளுவு அதிகம்தான்! மிகமிக அதிகம்! அதனால், வட்டிகட்டித்தீரவேண்டிய தொல்லை ஏற்படுவது மட்டு மல்ல, பணப்பெருக்கம் ஏற்பட்டு, விலைவாசி ஒரேயடி யாக ஏறி, மக்கள் மெத்தக் கஷ்டப்படுகிறார்கள்'' என்று கூறினர். “கடன் வாங்காமல் முன்னேற்றம் நடக்குமா?'' என்று, நம்பிக்கையுடன் கேட்டான் காவேரி. “எந்த முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறீர் நண்பர்! சித்தரஞ்சனா, சிந்திரியா?'' என்று நான்கேட்க, நவபாரதி, “சிந்திரியைக் குறிப்பிடமாட்டார், அதிலும் இப்போது!! காவேரி! அண்ணாத்துரை நம்முடையகட்சி அல்ல; அதனால் அவன் குத்திக்காட்டும்போது, நமக் குக் கோபம் வரத்தான் செய்யும்; ஆனால், கோபம் உண் மையைக் காணமுடியாத அளவுக்கு நம்முடைய கண் களை மறைக்கக்கூடாதல்லவா? எவ்வளவு வரிச்சுமை, கடன்பளு, இவைகளைத் தாங்கிக்கொண்டு, மக்கள் அவ திப்படுகிறார்கள். அவர்களிடம்சுரண்டிச், சிந்திரிபோன்ற பெரியதிட்டத்தை நடத்துகிறார்கள். அங்கு, இப்படிப் பட்ட அக்ரமம், கண்மூடித்தனமான நிர்வாகம் நடக்க லாமா? ஏன், அடுத்த தலைமுறைகூடக் கட்டித்தீர வேண்டிய அளவுக்குக் கடன் வாங்குகிறீர்கள் என்று யாராவது கேட்கும்போது, மார்தட்டிச் சொல்கிறோம், கடன் வாங்கிக் கடலிலா கரைக்கிறோம், கட்டித்தங்கம் வாங்கி நகைசெய்வதுபோல, விதைபோட்டுச் செடி வளர்ப்பதுபோல, இந்தப் பணத்தைப்போட்டு, நாட்டுக்குப் புதுச் செல்வம் தரக்கூடிய திட்டங்களைப் போடுகிறோம், அமைப்புகளை ஏற்படுத்துகிறோம், தொழில்களை அமைக்கிறோம் என்று பேசுகிறோம். பேசி விட்டுச் சிந்திரியைக் காட்டுகிறோம். அங்கு நடை பெற்ற அக்ரமத்தை எப்படி மூடி மறைக்கமுடியும்! எப்படிச் சகித்துக்கொள்வது? நீயேதான் சொல்லேன்'' என்று நவபாரதி கேட்டான். காவேரிக்குக் கோபத்தை விடத் துக்கம்தான் அதிகம் என்பது தெரிந்தது. நான் என்னசெய்வேன் நிர்வாக ஊழலுக்கு என்று, பொறுப் பைத் தட்டிக்கழிக்க விரும்புபவன் அல்ல காவேரி! எங் கள் கட்சி! எங்கள் சர்க்கார்! என்று மகிழ்ச்சியுடன், பெருமையுடன், சில வேளைகளில், ஆணவத்துடன் கூடப்பேசும் போக்கினன். பாவம்! பற்று இருக்கத் தானேசெய்யும்!! உரிமையும் இருக்கத்தானே இருக் கிறது! மந்திரி மாணிக்கவேலருக்கு, என் கட்சி! என் சர்க்கார்! என்று கூறிக்கொள்ளும், துடிப்பும், பற்றும், உரிமையும், நிலைமையும், இருக்கிறபோது, காவேரிக்கு இருக்கக்கூடாதா அந்த உரிமை. கைராட்டை காவேரி யாயிற்றே! மாணிக்கவேலர், சைகிள் பெட்டியாயிற்றே! காவேரி காந்திபக்தர். மாணிக்கவேலர் பூந்திதந்தவர் என்று பேசிக்கொள்கிறார்கள்!!

“பெரிய நிர்வாகத்திலே, சிறு சிறு தவறுகள் ஏற் பட்டுவிடுவதுதான். இதைப்போய்ப் பெரிதுபடுத்த லாமா?'' என்று சொல்லிப் பார்த்தான், காவேரி. “ஒன்றா, இரண்டா, பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத் துக்கொள்ள. அடுக்கடுக்காக வெளி வந்தபடி இருக் கிறது, ஊழல், விரயம், நிர்வாகக் கோளாறு. சிந்திரி விஷயம் சாதாரணமானதா! உணவு உற்பத்தி பெருக்கு வதுதான் திட்டத்தின் உயிர்நாடி என்கிறோம். உணவு உற்பத்தி பெருக, உரம் தேவை என்கிறோம் அந்த உரத் தொழில் நடக்கும் இடம் சிந்திரி. அங்கு மோச மான நிலைமை இருக்கவிடலாமா!! குழந்தைக்காக, பால் காய்ச்சி வைத்திருந்தேன், பாழாய்ப்போன பூனை உருட்டிவிட்டது என்று மனைவி சொன்னால், சமாதானம் வருவதில்லையே, நம் மனதுக்கு. இது அப்படிக்கூட அல்லவே! பாலைப் பூனை குடித்துவிட்டது; என்ன செய்வது? இது தெரியாமல், குழந்தை அழுகிறதே, கொஞ்சம்கூடப் புத்தியில்லாமல் என்று கூறிக்கொண்டே, குழந்தையை முதுகில் அறைந்துவிட்டு, அது வீறிட்டு அழ ஆரம்பித்ததும், பாலைக் குடித்த பூனை 'மியாவ்' 'மியாவ்' என்று கத்து வதைக் காட்டி, பாப்பா! அழாதே! அதோ, கேள், பூனை பாடுகிறது! அதைக் கேட்டுக்கொண்டே தூங்கு! கண்ணல்ல, தூங்கம்மா, தூங்கு!!—என்று தாய் பேசினால் எப்படி இருக் கும்? அப்படி இருக்கிறது ஒவ்வொரு, ஊழலைப்பற்றியும் சர்க்காரை நடத்துகிறவர்கள் சமாதானம் சொல்லும் போக்கு.''

இவ்வளவும், சர்க்காரின் சாதனைகளைக் குறித்து, வெளியீடுகளை அச்சிட்டு வழங்கும், நவபாரதம், பேசு கிறார். தம்பி! எனக்கு வேலையே, இருக்காது போலிருந் தது.

“காவேரிக்குக் கண்களில் கலக்கமே தெரிகிறது. நவபாரதம்! நீ ஏனப்பா இப்படி வாட்டி எடுக்கிருய்?'' என்று நான், குறுக்கிட்டுப் பேசவேண்டியதாயிற்று, பேரயேன்.

“சிந்திரியில் காவேரி!'' என்று, சிறிதளவு அமைதியான முறையில் தொடங்கினுன் நவபாரதம்; சிந்திரியில், திடீரென்று உர உற்பத்தி வேலை நின்றுவிட்டது. ஏனென்று கேட்டால், அப்படி ஆகிவிட்டது நிலைமை. இன்னும் ஒரு ஆறுமாதகாலம்ஆகும், உற்பத்தி நிலைமை சீர்பட, என்கிருர்கள். சீர்கேடு ஏன் ஏற்பட்டது என்று கேட்டால், சிந்திரியில் இயந்திரங்களை ஓட்ட உபயோகப்படுத்தப்பட்ட நிலக்கரி, மட்டமானதாக இருந்ததால், பழுது ஏற்பட்டுவிட்டது என்று, மத்திய அமைச்சர் சமாதானம் கூறுகிருர். நல்லதரமான நிலக்கரி எஃகுத் தொழிற்சாலைக்குப் போய்விட்டதாம்; மிச்சம் இருந்த மட்ட ரகம் இங்கு வந்ததாம்! இப்படியா ஒரு மந்திரி பேசுவது. இதனுல் ஏற்பட்டுவிட்ட நஷ்டத்துக்கு யார் பொறுப்பு ஏற்பது?'' என்று கேட்டான்.

“எனக்கு ஒன்று தோன்றுகிறது, காவேரிக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ. இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டதால், இதற்குத் தங்கள், வருத்தத்தைத் தெரிவித்துப் பொதுமக்களுக்குத் தலைவணங்கும் முறையில், அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகத்திலிருக்கும் உயர்தர அதிகாரியும், தொழில் துறையை ஏற்றுக்கொண்டிருக்கும் மத்திய அமைச்சரும், தமது பதவிகளை இராஜிநாமாச் செய்வது, நல்லது; மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமையும். ஆனுல், ......'' என்று நான் சொன்னேன்.

“இதற்கெல்லாம் இராஜிநாமா செய்வது என்ருல், அமைப்புகள் நடக்காதே. பெரிய பண மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிந்தால், இராஜிநாமாச் செய்யும்படி வற்புறுத்தலாம்'' என்ருன் காவேரி.

“உலக்கைக் கொழுந்து என்பார்களே, அப்படி இருக்கிறதப்பா உன் புத்தி—பணமோசடி ஏற்பட்டால், கையிலே விலங்கு பூட்டி உள்ளே அடைப்பார்கள்'' என்று நவபாரதம் பதிலளித்தார்.

“நிர்வாகத்தில் எவ்வளவு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது என்பதற்கு, வேறு எதையும்கூட ஆராயத் தேவையில்லை. **1958-59ல் சிந்திரியில், ஒரு கோடியே ஒன்பது இலட்சம் இலாபம் கிடைத்தது; அடுத்த வருஷத்திலேயே அந்த இலாபம், கிடுகிடுவெனச் சரிந்துவிட்டது. 1959-60ல் கிடைத்த இலாபம் 25 இலட்சம்!** இது முறையா?'' என்று கேட்டேன்; காவேரி மனம் பதறி, “பாவிகள், இப்படி எல்லாம் தாறுமாருக நடந்துகொண்டு பண்டித நேருவுக்குக் கெட்ட பெயர் வாங்கிக்கொடுக்கிருர்கள். மக்கள் வாழவேண்டும், அதற்கு என்ன திட்டம் போடலாம், என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம்என்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிருர். அவரவர்கள் தங்கள் தங்கள் காரியத்தைச் சரிவரக் கவனித்துக் கொள்வார்கள் என்று நம்புகிருர். அவரை மோசம் செய்கிருர்கள்'' என்று காவேரி பேசிடக் கேட்டு, எனக்கு, உண்மையாகவே பரிதாபம் ஏற்பட்டது. தம்பி! காவேரிக்கு, ஏற்பட்ட அக்கரையைக் கவனித்தாயா? நேரு பண்டிதர் வரையிலாவது அப்பழுக்கற்றவர் என்று ஏற்படுத்திக் காட்டி, மனதுக்கு ஒரு ஆறுதல் தேடிக்கொள்ள முனைகிற வேடிக்கை புரிகிறதல்லவா!!

“காவேரி! நேரு பண்டிதர்மீது கண்டனம் தெரிவிக்கிறேன் என்று எண்ணிப் பதருதே. அவர் கண்முன் நடைபெறும், ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியவற்ருல், இந்த 14 ஆண்டுக் காலத்தில், எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய், நாசமாகி இருக்கிறது. ஆனுல், அவர் துளியாவது பதறுகிருரா! கண்டிக்கிருரா! களைய முற்படுகிருரா?

வேறு எவரேனும், இந்த ஊழல்களைக் கண்டித்தால் இவர்தானே, வரிந்து கட்டிக்கொண்டு வருகிருர், பதில் அளிக்க, பழி துடைக்க, பாதுகாப்புத்தர! பிறகு, ஊழல் நிர்வாகம் நடத்துபவர்களுக்கு, அச்சம், ஏன் ஏற்படப் போகிறது! திருத்தவேண்டும் என்ற எண்ணம்தான் எப்படி உண்டாகும்!!'' என்று கேட்டேன். காவேரி, வாய்திறக்கவில்லை. துக்கம் துளைக்கும் நிலைதான்! வேறெப்படி இருக்கமுடியும்?

“மற்ருென்று காவேரி! மக்களின் நல்வாழ்வுக்காகப் பண்டித நேரு அரும்பாடுபடுகிருர் என்று நம்புகிருய்—நம்பச் சொல்கிருய். ஆனுல், நிலைமை, வேறுவிதமாக அல்லவா இருக்கிறது. பதினுன்கு ஆண்டு நேரு ஆட்சிக்குப் பிறகு, கிட்டத்தட்ட ஐயாயிரம் கோடி ரூபாய் கடன் பளு ஏறிய பிறகு, ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வரியாக மக்கள் கொட்டிக்கொடுத்த பிறகு, மக்களின் நிலைமை எப்படி இருக்கவேண்டும், திட்டம் வெற்றிபெற்று, பலன்கள் உருவாகக் கிடைத்து, அது மக்களிடம் பரவி இருந்தால், மரப்பொந்துகளிலே முட்டையிட்டுவைக்கும் வண்ணப் பறவைகள், குஞ்சுகள் வெளிவரும், கொஞ்சிக் குதூகலிக்கும் என்றெண்ணியபடி, இரைதேடி வேறு இடங்களில் வட்டமிடும் வேளையாகப் பார்த்து, பாம்பு புகுந்து முட்டைகளை விழுங்கிவிடுமாம். அது போலன்ருே, பலன்கள் கிடைக்கும், பாங்கான வாழ்வு பெறலாம் என்று மக்கள் எண்ணி ஆவலுடன் காத்திருக்கும் போது, அந்த நம்பிக்கையுடன் கல் பிளந்து, மலை பிளந்து, காடு திருத்திக் கழனியாக்கி, நெருப்பில் வெந்து பிலத்தில் நுழைந்து, உடலைக் கசக்கி இரத்தத்தை வியர்வையாக்கிப் பாடுபட்டான பிறகு, பலன் தங்களுக்குக் கிட்டாமல், பகற் கொள்ளைக்காரர்களுக்குச் செல்வதைக் காண்கிருர்கள். பறவைகளாவது, படபடவெனச் சிறகடித்துக் கிரீச்சென்று கத்தி, இங்கு மங்கும் வட்டமிட்டுத், தமது கோபத்தைத், துக்கத்தைக் காட்டமுடிகிறது. காவேரி போன்ற உண்மைத் தொண்டர்களால், தமது மனதிலே ஏற்பட்ட கொந்தளிப்பை வெளியே கொட்டிக்கொண்டு ஒருவிதமான ஆறுதல் பெறக்கூட அல்லவா முடிவதில்லை!'' என்று நான் கூறினேன். தம்பி! காவேரி, காங்கிரசை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு, பிழைப்புக்கு வழி தேடிக்கொள்பவனல்ல. எனவே, அவனுக்கு உள்ளதை ஒரே அடியாக மறைக்க மனம் இடம்தரவில்லை; அதேபோது, கட்சிக்கு இழுக்கு

ஏற்படுவது கண்டு சகித்துக்கொள்ளவும் முடியவில்லை. கலங்கினான்.

"ஆட்சியிலே பல கோளாறுகள் ஏற்பட்டுவிட்டன; அதனை நானும் ஒரே அடியாக மறுக்கமுடியாது; மறுக்கக்கூடாது! ஆனால், காங்கிரஸ் கட்சியின் அந்த நாள் சாதனைகள், தியாகங்கள், இவைகளை அடியோடு மறந்துவிட முடியுமா! அந்த மதிப்பு மங்கி மடியவிட, அந்தக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்ட எவருக்குத்தான் மனம் வரும்.'' என்று காவேரி பேசினான்—தனக்குத்தானே பேசிக்கொள்பவன்போல.

பொக்கை வாய்க் கிழவன் தனக்கு மீசை சுருள் சுருளாக இருந்தபோது, மயான காண்டத்தில் சுடலை காத்த காட்சியில் ஊர் உருகப் பாடிய கூத்துபற்றிக், கேட்போர் சலிக்கும் அளவு கூறிக்கொண்டிருப்பது போல, வறுமை கொட்டுவதால் துடித்துக்கிடக்கும் மக்களிடம், வீரதீரமாகச் சுயராஜ்யப் போர் நடாத்தியது பற்றிப் பன்னிப்பன்னிப் பேசினால், எப்படி இருக்கும்! அதுபோலப் பேசுவதுதான் காவேரிக்குத் தெரிகிறது. அது பொருத்தமுமில்லை, அதிலே பொருளும் இல்லை என்பது அவனுக்கு எங்கே புரிகிறது. ஆனாலும், தம்பி! எனக்குக் காவேரி அதுபோலப் பேசும்போது கோபம் பிறப்பதில்லை; ஏனெனில், காந்தியார் சுட்டுக் கொல்லப் பட்டபோது, ஊராருக்கு இனிப்புப்பண்டம் வழங்கிய, 'உத்தமர்கள்' இன்று, காங்கிரசின் வீரத்தைப்பற்றி, தியாகத்தைப்பற்றி நீட்டி முழக்கிக்கொண்டிருப்பதை நித்த நித்தம் கேட்டுத் தொலைக்கிறேனே! அவர்கள் அல்லவா, மறுப்புரை கூறினால், சீறுகிறார்கள், சபிக்கிறார்கள்! காவேரிக்கு, இதைவிட அதிகமாக அல்லவா, மனவேதனை ஏற்படும். ஆனால், அவனுக்கு ஆத்திரம் அடிக்கடியும் வருவதில்லை; அதிக அளவிலும் ஏற்படுவதில்லை. வேறு சிலர் இருக்கிறார்கள் காங்கிரசாட்சியிலே உள்ள கேடுபாடுகளை எடுத்துச் சொன்ன உடனே, தீமிதித்தவர்போலாகிக் கொதிக்கிறார்கள், கொக்கரிக்கிறார்கள்!

சிறுவனாக இருந்தபோது, தம்பி! தெருக்கூத்துகள் நிறையப் பார்ப்பதுண்டு. இப்போதுகூட மெத்த விருப்பம் எனக்கு, நள்ளிரவில் ஒலிபெருக்கியின் துணை தேடாமல், ஊர் முழுவதும் கேட்கத்தக்க முறையில் குரலெழுப்பி, நடத்தப்படும் தெருக்கூத்துக்களைக் காண்பதில். கிருஷ்ண வேடம் போடுபவன், அலங்கார நடை நடப்பான்; ஆர்ப்பரிப்பு இருக்காது; புன்னகை செய்வான்; பற்களை நறநறவெனக் கடித்துக் காட்டமாட்டான்; குறும்புப் பார்வைதான் காட்டுவான், கொவ்வை போலக் கண்களைச் சிவப்பாக்கியும், உருட்டி மிரட்டியும் கண்களைக் காட்டமாட்டான். நளினமான நடை இருக்கும். துரியோதனன், துச்சாதனன் போன்றவர்கள் தான், மண்கிளம்பும் அளவுக்குக் குதிப்பார்கள், இடமும் வலமும் சரசரவென்று சுழலுவார்கள், ஆர்ப்பாட்டமாக இருக்கும். ஒரு இரவு, வழக்கமான முறையிலே நடித்துக்கொண்டிருந்த, கிருஷ்ண வேடக்காரன், துச்சாதனனைவிட அதிக ஆர்ப்பாட்டமாக, குதிக்க ஆரம்பித்தான். எங்களுக்கு ஒரே வியப்பு! கண்ணன் இப்படி நடிக்கக் கூடாதே! போட்டுள்ள வேடத்தை மறந்துவிட்டானோ ஒரு சமயம், என்று எண்ணிக் கொண்டோம். அவனோ வலமும் இடமும் வேகமாக சுற்றுகிறான், தாளக்காரன் திகைக்கிறான், துரியோதனனோ திடுக்கிட்டுப்போய், அசைவற்று நின்றுவிட்டான் போயேன், கண்ணன் ஆடிய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு.

மற்றவர்களைப்போல, இதைக்கண்டு வியப்படைவதுடன் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. கூத்து நடத்துபவர்களில், எனக்கு வேண்டியவர்களிடமே சென்று விசாரித்தேன், கண்ணன் இப்படி ஆடிடக் காரணம் என்ன? நடிப்பு இலக்கணமே பாழாகிவிட்டதே! ஒருசமயம், கதையையே, மறந்துவிட்டானோ!!—என்று கேட்டேன். இடி இடியெனச் சிரித்தபடி, விளக்கம் தந்தார்கள். விளக்கை நோக்கிப்பறந்துவந்தவண்டு, கண்ணன் போட்டுக்கொண்டிருந்த சட்டையிலிருந்த ஓட்டைவழியாக உள்ளே புகுந்துவிட்டது; நெளிந்து பார்த்தான், தானாக வண்டு கீழேவிழும் என்று; இல்லை! மாறாக, வண்டு, முதுகுப்புறம் சென்றது. ஓடி ஆடிப் பார்த்தான், கீழேவிழவில்லை; பொல்லாத வண்டு முதுகில் பலமாகக் கொட்டிவிட்டது. சுரீல் என்று எரிச்சல்! கண்ணன் வேடமானால் என்ன, காகுத்தன் வேடமானால் என்ன, வண்டு கொட்டினால் வேதனைதானே! அந்த எரிச்சலால். வேதனையால், கண்ணன்வேடம் போட்டவன் அந்த ஆட்டம் ஆடினான், துரியனைத் தோற்கடிக்கும் அளவுக்கு!!

எப்போதோ பார்த்த இந்தக் கூத்துதான், எனக்கு இப்போதெல்லாம், காங்கிரசார் ஆர்ப்பாட்டம் செய்யும் போது நினைவிற்கு வருகிறது. நடிகனை வண்டு கொட்டி, ஆர்ப்பரிக்கவைத்ததுபோல, காங்கிரஸ் ஆட்சிக்குக் கிளம்பிய எதிர்ப்பு, சில காங்கிரசாருக்கு, சுரீல் என்று கொட்டும் வண்டுபோலாகிவிடுகிறது; துடிக்கிறார்கள், ஆர்ப்பரிக்கிறார்கள், கண்டபடி தூற்றியும் திரிகிறார்கள். பணபலம், பத்திரிக்கை பலம், மகாத்மா விட்டுச்சென்ற அருள்பலம், ஆட்சிப்பொறுப்பு அளிக்கும் செல்வாக்குப் பலம், இவ்வளவு அரண்களையும் துளைத்துக்கொண்டு, எதிர்ப்புக்கொட்டுகிறது என்றால், அவர்களால் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும்! நான் கண்ட தெருக்கூத்து நடிகன்போலாகிவிடுகிறார்கள்; கண்ணன்போல வேடம் இருப்பினும் துரியன்போல ஆர்ப்பரிக்கிறார்கள்.

தம்பி! இதை உன்னால் உணரமுடிந்தால், பிறகு, கொதித்து, குளறிப், பகை கக்கித் திரியும் காங்கிரசாரிடம் கோபம் அல்ல, இரக்கமே ஏற்படும்.

அண்ணன்,

அண்ணாதுரை

# பருத்தியின் வரலாறு

அப்போது விடியற்காலம்; மணி சுமார் நாலரை இருக்கும்: சென்னை செல்வதற்காக உந்து நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். நடுப்பாதையிலே சென்றுக்கொண்டிருந்த நான், ஒருவரின் நடுக்கக்குரலைக்கேட்டு நடைபாதை ஓரம் சென்றேன். அங்கு நான் கண்டகாட்சிகள்...... ஐயோ...? எப்படிச் சொல்வேன்?

“மானம் பிறந்த மண்ணிலேதான் நான் பிறந்தேன்.” என்ற உண்மையைக் காப்பதற்கு மட்டும் கோவணத்தைக்கட்டிக்கொண்டு குந்திய படி கோரக்குரல் கொடுக்கும் உருவத்தைக் கண்டேன். பாபம்! பனி பெய்யும் காலம். காற்றோ ‘ஜில்’ என்று வீசிக்கொண்டிருந்தது, பனியைத்தடுத்துக், குளிர்காற்றுப்புகாத மாளிகையில், பஞ்சணைமேல் படுக்கைத் துண்டுகள் பல விரித்திருக்க, அதன் மேல் பள்ளிகொள்ளும் பணக்காரன், சூடேற்றும் உல்லன் அணிகள் பல அணிந்து காஷ்மீரத்துச் சமுக்காளத்தைப் போர்த்திக்கொண்டு உறக்கம்கொள்ளும் அங்கிலை ஏழையால் எண்ணிப் பார்க்கக்கூட முடியாததாகும்!

அந்த ஏழை குளிரிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளத் தன் இரு கைகளைத் தவிர வேறொன்றையும் வைத்திருக்கவில்லை. மரக்கட்டையைப்போல் உருண்டு கிடந்திருக்கிறார்; குளிரின் நடுக்கமோ அவரைக்கொடுமைப்படுத்தியது! என்ன செய்வார்? இக்கொடுமையைப் பார்த்துக்கொண்டே போனேன். பக்கத்திலே மற்றொரு வாலிபன் சினிமா சுவரொட்டியைப் போர்த்திக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான். மற்றொருவர், சணல் நாரால் நெய்யப்பட்ட கோணியைப் போர்த்திக்கொண்டிருந்தார். மற்றும் பலர்......ஐயோ!... அக்கொடுமைகளைக்கூற என் நா கூசுகிறது!

“உலகிலேயே, முதல் தோன்றிய பூமியிலே, முதல் தோன்றிய மனித மரபிலே, முதன்முதல் நல்லபல ஆடையைக் கண்டவர் சந்ததியிலே தோன்றிய மக்களுக்குக் காலம் தந்த பரிசு இதுதானா?” என்று எண்ணிக்கொண்டே நடந்தேன். அக்காட்சிகளின் பிம்பங்கள் மறையாமல் அப்படியே என் உள்ளத்தில் பதிந்துவிட்டன. அக்காட்சிப் பதிவுகள் ஊன்றுகோலாய் நின்றுதான்

**சி. பெரியண்ணன்**

ஆடையின் வரலாற்றைப் பணயமாகக் கேட்டன. சிங்கத் தமிழகத்துச் செம்மல்கள் சிந்திப்பார்களாக!

‘மனிதனின் தோற்றமே குமரி கண்டம், அதாவது இலெமூரியா கண்டத்தில்தான்’ என்பது ஆராய்ச்சி அறிஞரின் முடிவு. குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் தான், பருத்தி ஆடையை அணிந்து வந்துள்ளனர் என்பர் ஆராய்ச்சியாளர்.

அன்றைய உலகில் பருத்தி வளர்ப்பும், அதன் தொழிலும் இலெமூரியாக் கண்டத்தில்தான் நடைபெற்று வந்தது. அக்கண்டம் சிதைந்தபின் எஞ்சிய நிலப்பகுதிகளில் அத்தொழில் அழியாது நிலைப்பெற்று வந்தது.

அப்படி அக்குமரிக்கண்டத்திலிருந்து மிஞ்சிய பகுதிகளாகிய தென் அமெரிக்காவும், தென்னகமும் தான் அப்பருத்தியின் பிறப்பிடங்களாகவும், அத்தொழிலின் தோற்றுவாயாகவும் இன்று கொள்ளப்படுவதாயிற்று.

ஆனால், அன்றுமுதல் இன்றுவரையில் தென் அமெரிக்காவிற்கும் வட நாட்டுக்கும் எவ்வித தொடர்பும் ஒட்டுறவும் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கிடையாது. இலெமூரியாக்கண்ட அழிவிற்கு முன், தென் அமெரிக்காவும், தென்னாடும் ஒரு நிலமாய் இருந்ததென்பதற்கு எத்தனையோ ஆதாரங்களை நம்மால் காட்டமுடியும்.

பருத்தியைப் பயிரிட்டு, பருத்தியிலிருந்து கொட்டையை நீக்கிப், பஞ்சாக்கி, நூல்நூற்று, நூலுக்குப் பல வண்ணச் சாயங்களிட்டுத் துணி நெய்து அழகான ஆடையாக்கி, ஆதிகாலந்தொட்டே தமிழர்கள் சிறந்து விளங்கிவந்துள்ளனர்.

கி. மு. 3000-ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டுக்கும், மேலை நாடுகளுக்குமிடையே வாணிபம் நடந்து வந்துள்ளது. அவ்வாறு நமது நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து வந்த வணிகர்களை ‘பாணிகள்’ என்றழைத்தனர். அந்தப் பாணிகளையும் தம்மினத்தவராக்கிக் கொள்ளச் சிலர் சில கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டனர்.

“பாணிகள் என்ற வணிகர் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்புகுந்து நாகரிகத்தைப் பரப்பினார்கள்.”

என்று அபினாஸ் சந்திரதாஸ் என்பவர் தான் எழுதிய “ரிக்வேத இங்

தியா'' என்ற நூலில் கூறியுள்ளார்.

"பாணிகள் என்ற சொல் வணிகர் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபெனக் கொள்க. பண்டைய நாட்களில் கடல் வாணிகத்தில் சிறந்தவர்கள் தமிழர்கள். ஆதலால், ஆரியர் கடற் செலவில் மிகுதியும் ஆற்றல் படைத்தவர்களல்ல. பாணிகள் ஆரியர்களுக்கு எதிரிகளாயிருந்தோராவர்!''

என்று 'தமிழர் வரலாறு' என்ற நூலில் கூறியுள்ளார்.

இதிலிருந்து தென்னகத்துத் தமிழர்கள்தான் வாணிகத்தில் சிறந்து விளங்கினர்கள் என்பதும், அலேயாடும் கடல் கடக்கும் ஆற்றல் படைத்தவர்களாய் இருந்திருக்கிருர்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனியாக விளங்குகின்றது!

இதுபோன்றே வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வந்து வாணிபம் நடாத்தி, முதன்முதல் பஞ்சாடைகளே மேலே நாடுகளுக்குக்கொண்டு சென்று வியாபாரம் செய்தவர்கள் 'அரேபியர்கள்' என்று வரலாறுகள் கூறுகின்றன. அந்த அரேபியர்களே எடுத்துக்கொண்டாலும், அவர்கள் நம் தென்னகத்தில்தான் கப்பல் செலுத்தும் மாலுமிப் பயிற்சியைப் பெற்றிருக்கிருர்கள் என்பதை எவரும் மறந்துவிடமுடியாது.

"மேலே நாட்டில் கப்பலோட்டிய பொனீஷியர் தமிழரோடு உறவு கொண்டனர் என்று பலர் எண்ணுகின்றனர். கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் போய்வந்தான் தமிழன். பல்லவர்கள் படை கிழக்கிந்தியத் தீவுகளே வென்றது. மேற்குக் கரையில் அரேபியர் வந்து மலேயாள நாட்டிலும், கீழைக்கரையிலும் தங்கித், தமிழரோடு தமிழராய், பின் சிறந்த மாலுமிகளாய் ஓங்கிப் போர்ச்சுகீசியரை அலேக்கழித்த வரலாற்றை நம்மவர்கள் இன்னும் நன்கு அறியவில்லே.''

என்று பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் கூறியுள்ளார்.

அரேபியர்கள் கடலோரமாகக் கப்பல்களேச் செலுத்தி இங்நாடு வந்தடைந்து, மாலுமிப் பயிற்சி பெற்று, இங்கிருந்த பஞ்சாடைகளேயும், நறுமணப் பொருள்களேயும் ஏற்றிச் சென்று மேலே நாடுகளில் விற்று வாணிபம் நடத்தியதாகக் கூறுகிறது வரலாறு.

சந்தாதாரர்களுக்கு:

## முக்கிய வேண்டுகோள்

"திராவிட நாடு'' இதழுக்குச் சந்தாதாரர்களாக இருக்கும் அன்பர்கள், தங்கள் சந்தா எண்களேயும், முகவரிக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் முடிவுதேதியையும் அன்பு கூர்ந்து சிரமம் பாராது உடனே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்.

அரேபியர் மட்டுமல்ல, கிரேக்கரும் உரோமரும் தமிழகத்திற்கு வந்து வாணிபம் நடத்தியதாக நம் இலக்கியங்கள் இயம்புகின்றன. அகநானூற்றில் 149-வது பாட்டில்:

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னெடுவந்து கரியொடு பெயரும்
வளங்கெழு முசிறி......!''

என்று வரும் அடிகளால் அறியலாம். 'யவனர்' என்பது கிரேக்கர், அரேபியர், உரோமரைக் குறிப்பதாகும். யவணப் பேராசிரியர் 'தாலமி' என்பார், தம் குறிப்பில் தென்னகத்தைப் பற்றிய பழைய செய்திகள் பலவற்றையும் குறித்துப் போந்துள்ளார் என்பதும் இங்கே நினேவூட்டுதற்குரியது. சேரத்துத் துறைகளாகிய தொண்டி, முசிறியில் மேலே நாட்டினர் வந்திறங்கி, பொருள்களேக் கொள்முதல் செய்ததோடு மட்டுமல்லாமல், உள்நாடுகளிலும் வாணிபம் செய்ததாகச் செய்திகள் உள்ளன. இக்கோணத்தில் நின்று பார்த்தாலும் தமிழகத்திலிருந்துதான் பஞ்சாடையைப் பிற நாட்டினர் கொண்டு சென்றனர் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

வடநாட்டிலிருந்துதான் பஞ்சாடை மேலே நாடுகளுக்குப் பரவின என்போர், வரலாறு அறியாதவர்கள்.

"கி. மு. நான்காம் நூற்றுண்டில்' பாண்டிய நாட்டு மெல்லிய ஆடைகள், மௌரியப் பெருநாட்டிற்கு மிகுதியாக அனுப்பப்பட்டன.''

என்று சாணக்கியர் பொருள் நூல் கூறுகின்றது. பஞ்சாடைத் தொழிலில் ஆற்றல் படைத்தவர்களாய் வடநாட்டினர் இருந்திருந்தால், பாண்டிய நாட்டு ஆடைகளே ஏன் வாங்கி அணியப்போகிருர்கள்!

சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நம் நாட்டு மக்கள், இந்நாட்டுப் பஞ்சாடைகள் மௌரியப்பெருநாட்டை அடைந்தது போலவே, தரைவழியாகவும், கடல் வழியாகவும் பல நாடுகளே அடைந்தன. அதிக விலே கொடுத்தாவது தென்னகத்துப் பஞ்சாடைகளே வாங்கி அணிய உல்லாச புரியினர் போட்டியிட்டு முன்வந்தனர். பல்லாண்டுகளுக்கு முன்னரேயே நம் தேயத்துப் பஞ்சாடைகளுக்கு மேலே நாடுகளில் நிறைய கிராக்கி இருந்து வந்தது.

அரேபிய வியாபாரிகள் மாலுமிப் பயிற்சியைத் தமிழர்களிடம் கற்றுத் தேர்ந்த பின்னர், உயிரையும் ஒரு பொருட்டாக மதியாது ஆயிரக் கணக்கான கல் தொலேவு கடற் பயணம் செய்து நம்நாட்டுப் பஞ்சாடைகளே மேலே நாடுகளுக்குக் கொண்டு சென்று விற்று நிறைய இலாபம் பெற்றுப் பலனடைந்தனர். இப்படிப் பல துறைகளில் பரவிய நம் தென்னகத்துப் பஞ்சாடைகளுக்கு, ஆப்கானிஸ்தானம், பாரசீகம், அரேபியா, பாபிலோனியா, எகிப்து, கிரீஸ், இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், நெதர்லாண்டு, இங்கிலாந்து ஆகிய மேற்றிசை நாடுகளிலும், சீனு, சப்பான், பர்மா, ஜாவா, மலாக்கா, முதலிய கீழ்திசை நாடுகளிலும் நிறையச் செல்வாக்கு இருந்து வந்தது.

இவ்வாறு பெருமையுற்ற நம் நாட்டுப் பஞ்சாடை மேலே நாட்டினரின் புகழ் மொழிக்கு ஆளாயிற்று. கிரீஸ் நாட்டைச் சேர்ந்த 'ஹெரோடோடஸ்' என்ற வரலாற்று அறிஞர் அக்காலத்து வரலாற்றை எழுதியுள்ளார். அவர் கி. மு. 386-ல் பிறந்தவர். அவர் ஒரு நூலில் நம்

பஞ்சாடைகளைப்பற்றிச் சிறப்பித்து எழுதியுள்ளார். பண்டைய வாணிபத்தைப்பற்றி எழுதியுள்ள "பெரிப்ளஸ்" என்ற நூலிலும் இப் பஞ்சாடைகளைப்பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளனர். "ஓடும் தண்ணீர்" "நெய்தற் காற்று" என்றெல்லாம் சிறப்பித்துள்ளனர்.

இவ்வாறு சிறப்புற்ற நம் தமிழகத்துப் பஞ்சாடைகளுக்கு மேலை நாடுகளில் பல்லாயிரம் ஆண்டுகளாக நிறையச்செல்வாக்கு இருந்து வந்தது. அந்நாட்டு அறிஞர் சிலர் கடிந்து கூறும் அளவுக்கு உயர்வு பெற்று விளங்கிற்று. 'ஆர்லியன்' என்னும் அரசன் ஆண்ட காலத்தில் நிறைக்கு நிறை தங்கத்தைப் பெற்றது. நம் நாட்டுத் துணிகளை உரோமாபுரியில் வாழ்ந்த மக்கள் பத்துக்கோடி உரோம நாணயங்களைக் கொடுத்து வாங்கினர்.

இவைகளைக் கண்ட அந்நாட்டு மக்களில் சிலருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. ஆகவேதான் நம் தமிழகத்துத் துணிகளுக்கு உரோமாபுரியில்தான் முதன் முதல் எதிர்ப்பு ஏற்பட்டது. 'பிளினி' என்ற பெரியார் உரோமர்களின் ஊதாரித்தனத்தை உண்மையாகக் கண்டித்தெழுதினார். ஆனாலும் உரோமில் எழுந்த எதிர்ப்பு வலுப்பெறவில்லை.

மீண்டும் கி. பி. 552-ஆம் ஆண்டு 'ஜஸ்டினியன்' என்ற மன்னவன் ஆண்ட காலத்தில், மீண்டும் அவ்வெதிர்ப்புத் தலை எடுத்தது. "என்ன செய்தால் திராவிடத்துத் துணிகளை மக்கள் வாங்காமல் விட்டுவிடுவார்கள்?" என்று தீரச் சிந்தித்த மன்னவன் தென்னகத்துத் துணிகளுக்கு வரி விதிக்கத் தலைப்பட்டான். ஆனாலும் வாணிகம் அதனால் பாதிக்கப்படவில்லை.

வரி விதிர்ப்பிற்குப் பின்னும் தென்னாட்டுத்துணிகளில்நிறைய இலாபம் வருவதைக் கண்ட அந்நாட்டு வணிகர் பலர் இவ்வியாபாரத்தில் இறங்கினர். அதோடு வரி விதிக்கும் அளவுக்குச் சிறப்புற்றிருந்த தென்னகத்துத் துணிகளைத் தாங்களும் கொண்டு வரவேண்டுமென்று சில ஐரோப்பிய நாட்டு வணிகர் எண்ணினர்.

ஆனாலும், "தென்னகத்துத் தமிழ் நாடு செல்வதானால் பல இன்னல்களை அடைய நேரும். வடநாடாக இருந்தாலும் கைபர், போலன் கணவாயின் வழியாகச் சென்று வந்துவிடலாம். ஆனால் அந்நாட்டிற்குச் செல்வதுதான் எப்படி?" என்று பலவாறாக எண்ணினர். துணிந்து செயலில் இறங்கிய போர்ச்சுகல் நாட்டினர் கடல் வழியாக கள்ளிக்கோட்டையை வந்தடைந்தனர்.

அதன் பின்னர்தான் டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் வந்து பல வியாபார நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

கி. பி. 1600-ல் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவிய ஆங்கிலேயர், 1640க்குள் நான்கு இடங்களில் வணிக நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டனர். வியாபாரத்தைக் கம்பெனியே ஏற்று நடத்தி வந்தது. அவ்வாணிபத்தால் நிறைய இலாபத்தைக் கம்பெனியாரே அடைந்து வந்தனர்.

ஒரு மடியை ரூபாய் 5க்குத் தென்னகத்தில் வாங்கி இங்கிலாந்தில் மடி ஒன்று 15 ரூபாய்க்கு விற்றனர். ஆண்டுதோறும் சுமார் ஐம்பதினாயிரம் துணி மடிகள் ஏற்றுமதியாயின. மடி ஒன்றுக்கு ரூபாய் பத்து வீதம் ஐம்பதினாயிரம் மடிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் இலாபம் சம்பாதித்தனர். இக்கொள்ளை இலாபத்தைக் கண்டித்து இங்கிலாந்திலேயே எதிர்ப்பு எழுந்தது. ஆனால், பிரெஞ்சு, ஹாலந்து நாடுகளில் அதே துணி இன்னும் மிகுந்த விலைக்கு விற்கப்படுவதாக எடுத்துக் காட்டியதால் எதிர்ப்புத் தணிந்தது. கைத்தறித் துணியனைத்தும் தென்னகத்திலிருந்தே கொண்டு சென்றனர்.

அன்பும், ஆதரவும் தருவோர்கள் இருந்த போதிலும், எதிர்ப்பும், வசை மொழிவோரும் இல்லாமல் இல்லை. எதிர்ப்பு அங்கு வலுக்கவே, ஒவ்வொரு மடியின்மீதும் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. வரி விதித்த போதிலும் அங்கு துணி இறக்குமதி குறையவில்லை. உள் நாட்டுக் கம்பளி வியாபாரம் மந்தமாயிற்று. அதன் விளைவால் தென்னகத்திலிருந்து கொண்டு செல்லும் கைத்தறித் துணிகளுக்கு இறக்குமதி வரி இருமடங்காகியது. கி. பி. 1688-ல் மேரி அரசியார் இங்கிலாந்தை ஆண்டார்கள். அவரும் அவர் கணவரும்கூடத் தமிழகத்துத் துணிகளின்மேல் மோகம் கொண்டிருந்தனர். மில் துணி சிறப்புற்றிருக்கின்ற இக்காலத்திலேயே தமிழகத்துக் கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்கர்கள் அளவிலா மதிப்புக் கொடுக்கிறார்கள் என்றால், அந்நாளில் அரசியாரும் அவர் கணவரும் இந்நாட்டுத் துணிகளின் மேல் ஆசை கொண்டிருந்ததில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்!

இந்நிலையுணர்ந்த கம்பளித் தொழிலாளிகளும், கம்பள வணிகரும் கடுஞ்சினம் கொண்டு கிளர்ச்சி செய்தனர். அவர்களின் வழக்கை 'மெக்காலே' என்ற புகழ் பெற்ற எழுத்தாளி அச்சமில்லாது எழுதினார். அவ்வெதிர்ப்பையொட்டி "முழு உண்மை" என்ற பெயரில்லாத துண்டு வெளியீடும் வெளி வந்தது. இவ்வெதிர்ப்புக்களால், "பிணத்தை மூடி அடக்கம் செய்ய கம்பளித் துணியைத்தான் உபயோக்க வேண்டும்," என்ற சட்டம் மக்களைக் கட்டாயப்படுத்தியது. ஆனால், எதிர்ப்பாளர்களுக்கு இச் சட்டமும் திருப்தி அளிக்கவில்லை. "செத்தொழிவோருக்கு மட்டுமல்ல; உயிரோடு உலவிடும் ஆங்கிலேய மக்களுக்கும் இவ்வகையான சட்டம் தேவை!" என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்.

'டானியல்டிபோ' என்ற வேறொரு ஏழுத்தாளரும் எதிர்ப்பாளர்களின் கொள்கையை ஏற்றார். பல கோணங்களில்தென்னகத்துத்துணிகளை நையாண்டி செய்து எழுதினார். அது மட்டுமல்ல; 'கால்செஸ்டர், என்னுமிடத்தில் கலகம்கூட ஏற்பட்டது. தென்னகத்துப் பஞ்சாடைகளை அணிந்து வரும் மாதர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு தொல்லைகள் பல தந்தனர். முடிவில் 1721-ஆம் ஆண்டு "பஞ்சுத் துணிகளை வாங்கி அணியக்கூடாது; மீறி நடப்போருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும்" என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இச்சட்டத்தையொட்டியே 1737லும், 1774லும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இச் சட்டங்களால் அந்நாட்டு மக்கள் சிலர் தாங்களாகவே பஞ்சிலிருந்து நூல் நூற்றுத் துணி நெய்ய முயன்றனர்.

கி. மு, 3-ஆம் நூற்றாண்டில்தான் மத்திய தரைக்கடலை ஒட்டிய நாட்டில் முதன்முறையாகப் பருத்தியைப் பயிரிடத் தொடங்கினர் எனத் தெரிகிறது. கி. மு. 70ல் பஞ்சுத் துணியாலான பாசறைகள், திரைகள், விதானங்கள் முதலியவைகளை உரோமர்கள் பயன்படுத்தியாக அறிகிறோம்.

ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அரும்பாடுபட்டு, அருமையான பிரமிடுகளைக் கட்டிப் பெருமையோடு வாழ்ந்த எகிப்தியர்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

களும்கூட, கி. மு. 70-ல்தான் பருத்தியைப் பயிரிடத் தொடங்கினர். தற்காலத்தில் எகிப்தில்தான் உயர்தரப் பருத்தி பயிராகிறது.

இவ்வாறு பஞ்சுத் துணி வாணிபத்தோடு, பருத்தி பயிரிடும் முறையும், நெசவுத் தொழிலும் சிறிது சிறிதாக மேலை நாடுகளுக்குப் பரவிற்று. கி. பி. 100லிருந்து 200க்குள் மேல் நாடுகள் சிலவற்றில் அப்பருத்தியிலிருந்து பஞ்சு வலைகள் பின்னத் தொடங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன.

மேற்றிசை நாடுகளில் பரவியது போலவே, கீழ்த்திசை நாடுகளுக்கும் பருத்தி பவனிவரத் தொடங்கிற்று. கி. பி. 7-ம் நூற்றுண்டில்தான் சீன மக்கள் பருத்திச் செடியை வளர்க்கத் தலைப்பட்டனர். ஆனுல், அதிலிருந்து பலன் பெற அல்ல; தேன் மலர்ச்சோலையிலே அழகுதரும் செடியாக வளர்த்து வந்தனர்.

சீனநாட்டிலிருந்து கி. பி. 798-ல் பருத்தி ஜப்பானை அடைந்தது. அடைந்தபோதிலும் மக்கள் அச்செடியை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. பல நூற்றுண்டுகளுக்குப்பின்னர் போர்சுகல் நாட்டினர் மறுமுறை ஜப்பானில் புகுத்தினர். அதன் பின்னர்தான் ஜப்பானியர் அதன் பெருமையை உணர்ந்து, அதனைத் தொழிலாக்க முனைந்தனர்.

புரட்சிக்கு வித்திட்ட பிரெஞ்சு நாட்டினர்கூடப் பன்னிரண்டாம், பதிமூன்றும் நூற்றுண்டில்தான் பருத்தியைப் பல வழிகளிலும் பயன்படுத்த முனைந்தனர். மெழுகுவர்த்தி செய்யவும், ஆண் மக்கள் உடலோடொட்டியபடியணியும் பனியன் போன்ற ஒருவகைச் சட்டைகள் செய்யவும் அவர்கள் பயன்படுத்தினர்.

ஸ்பெயின் நாட்டில் 13-ம் நூற்றுண்டில் பருத்தித்தொழில் பரவிற்று. ஆனுல், அந்நூற்றுண்டு முடிவதற்குள் அத்தொழில் அங்கு நிலைக்காமல் அழிந்துவிட்டது. பின்பு அத்தொழில் நெதர்லாண்ட் நாட்டிற்குப் பரவிற்று. அங்கும் அத்தொழிலுக்கு ஆதரவும் எதிர்ப்பும் மாறிமாறி ஏற்படவே, 16-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் கைவிடப்பட்டது. அந்நேரத்தில் நெதர்லாண்டிலிருந்த சில நெசவாளிகள் இங்கிலாந்து சென்றனர். பல நாடுகளால் கைவிடப்பட்ட பருத்தித் தொழில் இங்கிலாந்தைச் சேர்ந்தது.

தென்னகத்துப் பஞ்சாடை 5-வது நூற்றுண்டிலேயே இங்கிலாந்தை அடைந்திருந்தது. ஆனுல், நெதர்லாண்டு நெசவாளிகள் இங்கிலாந்தை அடைந்த பின்னர்தான் அங்கு பருத்தித்தொழில் ஒரு குடிசைத் தொழிலாக நடைப்பெறத் தொடங்கிற்று. இருநூறு ஆண்டுகளுக்குள் அத்தொழில் எண்ணற்றவர்களுக்கு வேலை அளிக்கத்தக்கதாயும், மிகுந்த வருவாய் தரத்தக்கதாயும் மாறிற்று. அந்நேரத்தில் நடந்த தொழிற்புரட்சியின் காரணமாகச் சில பொறியியல் வல்லுனர்கள் புதுப்புதுப் பொறிகளைக் கண்டுபிடித்து நாளடைவில் பெருத்த ஆலைத்தொழிலாக்க முனைந்தனர்.

விரைவாக நூல் நூற்கவும், ஒரே நேரத்தில் பல இழைகளாக நூல் நூற்கவும், மனித உழைப்பிற்கு ஈடாக பொறிகளின் உழைப்பினைப் பயன்படுத்தவும் பல ஆண்டுகளாக இங்கிலாந்து விஞ்ஞானிகள் முயன்று வந்தனர். அதன் பயனுக ஜேம்ஸ்—ஹார்க்கிரீவ்ஸ் என்ற ஓர் ஏழைக் கம்பள நெசவாளி கி. பி. 1700ல் ஒரே நேரத்தில் பதினறு இழைகள் நூற்கக் கூடிய ஒரு புதிய பொறியைக் கண்டுபிடித்தார். இச் செயலால் பாட்டாளி மக்கள் பதை பதைத்தனர். கடுஞ்சினம் கொண்டனர். "பல பேர் செய்து பிழைக்கக்கூடிய ஒரு வேலையை ஒரு பொறி முடித்துவிட்டால், நமக்கெல்லாம் நாளடைவில் வேலையின்றிப்போய்விடுமோ?" என்று அஞ்சினர். சீற்றம் கொண்டு அப்பொறிகளைஉடைத்தார்கள்! அதைக் கண்டுபிடித்த ஹார்க்கிரீவ்ஸையும் கொல்ல முனைந்தனர். ஆனுல் ஹார்க்கிரீவ்ஸ் அவர்களின் பிடியிலிருந்து தப்பிச்சென்று, மீண்டும் ஒரு புதுப் பொறியைக் கண்டுபிடித்தார். இதனுல் நெசவாளர்களுக்குத் துணி நெய்யப் போதுமான நூல் தொடர்ந்து கிடைத்தது.

பின்னர்தான் இங்கிலாந்தையே சேர்ந்த ஜான்கே என்பவர் கி. பி. 1733-ல் நெசவில் ஊடைநூலை விரைவாகக் கொடுத்து வாங்கும் ஒரு முறையைக் கண்டுபிடித்தார். ஹார்க்கிரீவ்ஸ் கண்டுபிடித்த பல இழைகள் நூற்கும் முறையையும், ஆர்க்கரைடு கண்டுபிடித்த நீர் ஆற்றலையும் பயன்படுத்தி இணைத்து கி. பி. 1771ல் நாட்டிங்காம் என்ற ஊரில் சிந்தனையாளர் கிராம்டன் என்பவர் உலகிலேயே முதல் பஞ்சாலையை நிறுவினர். பஞ்சாலை முன்னேற்றத்தில் இம் மூவரின் அடிப்படை வேலை என்றும் அழியாது.

1750-லேயே 10 ஆயிரம் பேர் வேலை செய்யும் ஒரு சிறந்தத் தொழிலாகப் பஞ்சாலைத் தொழில் அபிவிருத்தியடைந்தது. பாரினுக்குப் பஞ்சாடையைப் பரிசாகத் தந்துவிட்டுப் பரதவித்துச் சாகிறுன் தமிழன் இங்கே! இந்நிலை சரிதானு! சீலத் திருவிடத்து மக்களே சிந்தியுங்கள்.

✻

---

தலைமைக் கழக அறிக்கை 6/61

## தி. மு. க. தலைமைச் செயற்குழு-பொதுக்குழுக் கூட்டங்கள்

தி. மு. கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 21—4—61 வெள்ளியன்றும், பொதுக்குழுக்கூட்டம் 22, 23—4—61 சனி, ஞாயிறு கிழமைகளிலும் நெல்லை மாவட்டம் தூத்துக்குடியில் நடைபெறும்.

'அறிவகம்', சென்னை-13
*24-3-61.*

சி. என். அண்ணுதுரை,
பொதுச்செயலாளர், தி. மு. க.

காஞ்சிபுரம், 06, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.